ஆண்டு விழா வெளியீடு

செங்குந்தர் ஜாதி நூல் கோவை

தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்

89, அரண்மனைக்காரன் தெரு,
சென்னை-600 001.

மறுபதிப்பு : 1981

தென்னிந்திய

செங்குந்த

மகாஜன

சங்கம்

89, அரண்மனைக்காரன் தெரு,

சென்னை - 600 001.

ரூ. 2-11

அச்சிட்டோர் : வெல்டன் பிரிண்டர்ஸ், சென்னை-5.

முன்னுரை

இன்று நிகழ்வது செய்தி. அன்று நடந்தது வரலாறு. தொன்று விளைந்தது புராணம்.

புராணப் பழைமையும் பெருமையும் இல்லாத நாடு, உயிர் இல்லாத வெற்றுக் கூடு போன்றதாகும்.

செங்குந்தர்களின் தோற்றமும் ஏற்றமும் பேசும் கந்த புராணம் நமது சொந்தபுராணம். செங்குந்தர்களின் பண்டைய செய்திகளை ஆற்றொழுக்காக எடுத்துக்கூறிக் கந்த புராணத்திலிருந்து மேற்கோள் காட்டும் இந்நூல் செங்குந்த குல மக்களின் வரலாற்றுப் பட்டயம்.

இந்த அரிய நூல் 1911 இல் வெளியிடப்பட்டது. பொன் விழாவில் இதனை மீண்டும் பதிப்பிப்பது அவசியம் என்று உணர்ந்தோம். அவ்வையாருக்கு நெல்லிக்கனி தந்த அதியனைப்போலத் தஞ்சை மாவட்ட செங்குந்த மகாஜன கல்விச் சங்கப் பொதுச் செயலாளர் **திரு. ச.கு. பா. பழநிவேலு** அவர்கள் இந்நூலைச் செங்குந்தர்க்கெனத் தேடித் தந்துள்ளார். பழந்தாளிலிருந்து அரிதில் முயன்று அழகாகப் படி எடுத்து இந்நூலை வழங்கியவர் புலவர். **ப. இராச மாணிக்கம்,** M.A. திருநாகேச்சுரம், தஞ்சை மாவட்டம்.

இப் பெருமக்கட்குத் தலைச்சங்கத்தின் நன்றி உரியதாகுக. காலக் குறைவிலும் கடமையைக் கவினொடு புரிந்த வெல்டன் பிரிண்டர்ஸ்க்கு எங்கள் பாராட்டு!

செங்குந்தர்கள் ஒவ்வொருவரும் இந்நூலின் பயன் கண்டு, 'பழமையிலே புதுமை நினைவு பாய்ந்தெழுந்து' சமுதாய வாழ்க்கையில் புத்தாக்கம் பெற்றிட விரும்புகிறோம்.

தி. ரா. செல்வராசன்,
டி. சேதுராமன்,
செயலாளர்கள்.

அன்புமனம் அறிவுநலம்

ஆர்வத்தின் தனிப்பிறவி !

பொங்கும்நல் ஆற்றலினால்

பொதுப்பணிக்கே தனைஈந்தார்

எண்ணிஎண்ணித் துணிவதனால்

எடுத்தபணி முடித்திடுவார்

கைத்தறியின் காவலராம்

கூட்டுறவின் புரவலராம்

செங்குந்தர் பெருந்தலைவர்

சீராளும் பேராளர்

திரு. எம். பி. நாச்சிமுத்து, B.A. B.L.

அவர்கட்கு

அன்புக்

காணிக்கை !

உ

கணபதி துணை

சிவமயம்

செங்குந்தர் ஜாதி நூல் கோவை

இஃது

திருக்கைலாய பரம்பரை

காஞ்சீபுரம் மகாநாடு

ஆண்டவமார் ஓராயிரத்துத் தொளாயிரத்தில் ஒருவரும்

ஸ்ரீ சுந்தராம்பாள் சமேத கச்சபேசுவர சுவாமியார்

தேவஸ்தான தர்ம கர்த்தரில் ஒருவருமான

M. R. Ry. **M. T Samynatha Mudaliyar**

அவர்கள் அனுமதியின்படி

காஞ்சிபுரம் சேர்ந்த ஐயங்கார் குளம்

ம-ா-ா-ஸ்ரீ, கன்னியாங் **கந்தசாமி முதலியார்**

குமாரரும், ஷியூர் ஸ்கூல் மேனேஜர்

ம-ா-ா-ஸ்ரீ திருவேங்கடம்பிள்ளையவர்கள்

மாணுக்கருமான

பொன்னுசாமி முதலியாரால்

சென்னை ஜெகத் பிரகாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

வெற்றிவேலுற்ற துணை

செங்குந்தர் சரித்திர சுருக்கம்

அகண்ட பரிபூரண சச்சிதானந்த சின்மய சிதாகாச கனசிவ சொரூபமாய் விளங்குவது கயிலை. அது பதினெண் பிரிவினை உடைய தெய்வ சமூகங்களும் விரும்பி உறையும் பெருமிதம் வாய்ந்து இயமாதிய எண் வகை யோகத்தின் வழி நிற்கும் அருமறை முனிவர் அன்புடன் வாழும் தவத்தான மாய்ச் சிறந்து விளங்கி, அநேக ஆயிரம் யோசனை பரந்து ஆகாயம் அளாவ வளர்ந்த ஒரு பெருங்குலாசலம். அத்தகைய மேன்மை வாய்ந்த பருப்பதத்தின் கண் வித்தியாதராதி கணங் களுடன் இந்திரனும் வசிஸ்டர் முதலிய பிரம நிட்டர்களும் மாலயனாதிய சிவ கணங்களும் பூத கணங்களும் வணங்கி, சிரத்தில் கூப்பிய கரத்தினராய்க் குறிப்பறிந்து நிற்க, ஆன்மாக் களிடத்தே பதிந்த கைம்மாறு அற்ற பெருங்கருணையினலே படைத்தல், காத்தல், அழித்தல். மறைத்தல், அருளல் என்னும் ஐம்பெரும் தொழில்களையும் இயற்ருது இயற்றி வரும் அருட் பெருஞ்சோதியாகிய சிவபெருமான், நவரத்தினங்களால் இழைத்துத் தேவதச்சனல் செய்யப்பட்டமகா மண்டப நடு வின் கண், ஆயிரம் கோடி சூரியரைப் போலப் பிரகாசிக்கும் பல சிங்கங்களால் தாங்கப் பெற்ற விமானத்தில், வெண்ணீறு பூத்ததிருமேனியும் கொன்றையும் கங்கையும் மூன்ரும் பிறைச் சந்திரனையும் தாங்கிய ஜடா மகுடமும், எண்ணிறந்த பிர்மா விஷ்ணுக்கள் இறந்த என்புகளைச் சாட்சியாய் அணிந்த சிர மாலையும் சந்திர சூரியாக்கினி என்னும் திரிநேத்திரங்களும் ஆலகால விஷத்தை உண்ட நீலகண்டமும் மான், மழு, அபயம், வரதம் என்னும் நான்கு திருக்கரங்களும் புலித் தோலாடையும் ஆனைத்தோல் போர்வையும் அரவாபரணமும் உடைய சொரூபத்தோடு அருட்சத்தியாகிய உமாதேவியார் இடப்பாகத்தில் வீற்றிருக்கக் கொலு வீற்றிருந்தருளும்

சன்னிதானத்தில் நந்தியெம்பெருமான் வழிவிடச் சென்ற பிரமன் விட்டுணு தேவேந்திரன் அஷ்டவசுக்கள் இருடிகள் தேவர்கள் முதலிய யாவரும், 'சூரபன்மனால் மிகவும் மெலிந்து உள்ளோம்' என்று இருகரங்களையும் சிரமேற் குவித்து, 'சர்வ அண்டாண்டங்களுக்கும் ஆதாரமாகிய சிவபெருமானே! அடியேங்கள் யாவரும் கொடுங்கோல் செலுத்தும் சூரனால் எங்கள் பதங்கள் எல்லாம் இழந்து மேருச்சாரலில் வெகுகால மாய் ஒளிந்து கொண்டிருக்கிறோம். சூரன் சிரேஷ்ட குமாரனாகிய பானுகோபனால், சயிந்தன் முதலிய தேவர் யாவரும் பலவித சின்னப்பட்டும் சிறையிடப்பட்டும் மது மாமிசம் எடுக்கப்பட்டும் இன்னும் அசுரர்களால் படுந்துயர் சொல்லி முடியாததே! தேவரீர், திருவுளம் அறியாததோ? கர்த்தனே, இனி அத்துயரம் தாங்ககில்லோம்! ஆதலால், தங்கள் ஒப்பற்ற சொரூபமாகவே தங்களிடத்திலேயே ஒரு குமாரனைத் தர வேண்டும்' என்று வேண்டிக் கொண்ட தேவரை, 'அஞ்சன் மின்!' எனக் கண்ணுதல் கனிந்த மனத்தராய் தமது பழமை யாகிய ஆறு முகத்தோடும் விளங்கினர். அம்முகம் ஆறுனும் உள்ள நுதற்கண்களின்றும் ஆறு அக்கினி பொறிகள் தோன்றின. அத்தீப் பொறியானது அண்டங்களும் திசைகளும் மூடப் பரவியது.

(உதாரணம் : கந்தபுராணம் உற்பத்தி காண்டம்)

(திருவவதாரப் படலம் 44 வது கவி)

"நிற்புரு மமரர் யாருநெஞ்சு துண்ணென்ன நீடு
மற்புத நீரராகி யருண்முறை யுன்னி போற்றச்
சிற்பரன் முன்கொண்டுள்ள திருமுகமாறு தன்னிற்
பொற்புறு நுதற் கண்டோறும் புலிங்க மொன்றொன்று
தந்தான்."

(ஷ படலம் 46 வது கவி)

"மாதண்டங் குலவுநேமி வால்வளை வயிரவொள்வாள்
கோதண்டம் பரித்தோன்வே தாகுரித்துணர் வரியசோதி

வேதண்டம் பரவிற்றென்ன மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங்காறுஞ்சென்ற முதல்வன் கண்ணுதலிற்செந்தி'

அது கண்ட தேவர்கள் பயந்து நாற்றிசைகளிலும் சிதறி யோடினர்கள். வாமபாகத்திலிருந்த உமா தேவியாரும் பயந்து தனது கால்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்குற்று ஒலிக்கும் படி அந்தபுரத்தோடினர். திக்குகள் தோறும் ஓடின பிரமன் இந்திரன் மால் முதலிய தேவர் வருந்தி பெருமூச்சு விட்டு, ஒரு விதத்தினும் சகித்து உயிர் பிழைப்பது அரிதாகிப் பின்னும் பரமசிவத்தை அடைந்து, 'கர்த்தனே! மிக்க வலிமையுடைய அவுணரை அழிக்க ஒரு புத்திரனை வேண்டினோம். அதற்கு முடிவில்லாத ஆற்றலுடைய அக்கினியைக் கிருபை செய்தீர். அவ்வக்கினியைக் கணப்போதில் மாற்றுவிடில் உலகம் முடி வாய் விடுமென்று முறையிடும் தேவர்களுக்கு இரங்கி, எம்பெருமான், புதிதாகத் தோன்றிய ஆறு முகங்களையும் மாற்றி, முன்போல் ஏக முகத்தோடும் இருந்து, அனற் பொறிகளைக் குறுக தன்னெதிரில் வரச் சிந்தித்து. வாயுதேவனையும் அக்கினி தேவனையும் அழைத்து, 'நீவிர் இவ்வாறு தீப்பொறி களையும் கொண்டு போய்ச் சரவணத்தில் விடுவீர்! என்று கட்டளை இட்டு, அப்பொறியைத் தாங்கிச் செல்லும் வலியையும் அருளினர். அவர்கள் அவ்வாறே கொண்டு போய் சரவணப் பொய்கையில் விட்டார்கள். விட்ட தீப்பொறி ஆறும் ஆறு முகங்களாகவும் பன்னிரு கரங்களோடும் திருவுரு எய்தி வீற்றிருந்தது.

(உதாரணம் : ஷ படலம் 9வேது கவி)

"அருவமா யுருவமாகி யனாதியாய்ப் பலவாய்யொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங் குதித்தனனுலக முய்ய"

அவ்வாறு பொறிகளும் ஆறு குழவியாகித் தாமரை மலரில் விளையாட்டயர்தலைக் கண்ட தேவேந்திரன் மகிழ்வெய்தி

கார்த்திகை முதலிய மாதர்களையும் அழைத்து அக்குழவிகளுக்குப் பால் கொடுக்கும்படி கட்டளையிட, அவ்வாறே அம்மாதர்கள் சென்று பால்கொடுக்க, அப்பாலையுண்டு வளர்ந்து, அக் குழவிகள் அற்புத விளையாடல்கள் செய்திருந்தன. பின்னர், அத்தீப்பொறிக் கஞ்சி காற்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கி நவமணிகள் சிதற ஓடின உமையவள், நடந்த விஷய முணர்ந்து சிவானுக்கிரகத்தால் தன் வயிற்றில் உதிக்கத்தக்க மதலையைப் பெருமானது நுதற் கண்ணில் உதிக்கச் செய்வதற்குக் காரணமாயுள்ள பொன்னகர்க்கு இறைவன், பிரமன், விட்டுணு முதலிய தேவர்கள் பத்தினிமார்களுக்கு இத்தின முதல் புத்திர சந்தானம் இல்லாமல் போகக் கடவது என்று கடுஞ்சாபம் இட்டாள்.

அன்றுமுதல்—விண்ணவர் ரிஷிகள் விருத்தி இல்லாமல் அதுவரையில் தோன்றிய கணக்குப்படி முப்பத்து முக்கோடி தேவரென்றும் நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் என்றும் பேசவிருக்கின்றனர். இது நிற்க, ஈஸ்வரியானவள் சிவபெருமான் சந்நிதானத்தில் வந்து வணங்கி, 'சுவாமி! தாங்கள் தேவர்கள் குறையை நீக்கும் பொருட்டுத் தேவரீர், கிருபை செய்தருளிய அனற்பொறிக்கு அஞ்சி, நீங்கி மீண்டனன்' என்று விண்ணப்பம் செய்ய, சிவபெருமான் மகிழ்ந்து இடப்பாகத்து இறுத்தினர். இது நிற்க, முன்னர் அம்பாள் வெருவி ஓடுகையில் பாதச் சிலம்பினின்று சிதறிய நவமணிகளும் பரமசிவன் அனுக்கிரக விசேடத்தால் சன்னிதானத்தில் பிரகாசித்திருந்தன. அம்மணிகளான மாணிக்கம், முத்து, புட்பராகம், கோமேதகம், வைடூரியம், வைரம், மரகதம், பவளம், நீலம் முதலான நவமணிகளிடத்தும் பார்வதி தேவியாருடைய சுந்தர வடிவமானது விளங்கிப் பிரகாசித்திருந்தது. அதைக் கண்ட பரமசிவம், 'இங்ஙனம் வரக்கடவீர்' என்று கிருபையோடும் அழைக்க, உடனே மணிக்கு ஒரு சக்திகளாக உருவு கொண்டு வெளி வந்தனர்.

(உதாரணம் : கந்தபுராணம். துணைவர் வரு படலம் 8)

"எண்ணிலா நவமணிகள் உமையுரு எனைத்துங்
கண்ணினால் தெறிந்து அருளினால் வம்மெனக் கழற
வண்ணலோர் வகைமணிக் கொருசத் திகளாக
நண்ணினார் நவசக்திகள் அமரர் நற்றவத்தால்"

இவ்வாறு மணிக்கொரு சக்திகளாக வெளிவந்த, பார்வதி தேவியாரை ஒத்த சுந்தர வடிவங்களைப் படைத்து ,உதித்த நவசக்திகளும் பரமசிவத்தை வணங்கி நின்றார்கள்.

(உதாரணம் : கந்தபுராணம். துணைவர் வரு படலம் 9)

"பருப்பத கொடிபுரை நவசக்திகள் பரமன்
திருப்பதத் திடை வணங்கி நின்றவணிடைச் சிந்தை
விருப்பம் வைத்தலு முனிவர் தம் மகளிர்போல் விரைவிற்
கருப்பம் உற்றனர் யாவையும் உமையவள் கண்டாள்"

இவ்வாறு பரம்சிவனை வணங்கி நின்ற அச்சத்திகள் சிவ பெருமானிடத்து இச்சை வைத்த படியால் உடனே முனிவர் மகளிரைப் போல் கருப்பங் கொண்டார்கள். இச்செய்கைகள் அனைத்தும் உமையவள் நேரே கண்ட மாத்திரத்தில் உருத்திர சங்கார மூர்த்தியைப் போல் கோபித்து, 'எனக்கு மாறாக நீவிர் கருப்பம் கொண்டமையால், இக் கருப்பம் வெளிப்படாமல் இருக்கக் கடவதென்று சபித்தாள்.

(உதாரணம் : துணைவர் வருபடலம் 10வது கவி)

"முனம் புரிந்து உலகளித்தவள் அனையார்பான் முதிருஞ்
சினம் புரிந்து இவண்எமக்கு மாறாகிய திறத்தால்
கனம்புரிந்த இக்கருப்பமோ டிருத்திர் பல்கால
மினம்புரிந்த நீர் யாவரும் என்று சூள் இசைத்தாள்"

(உதாரணம்: கந்தபுராணம் துணேவர் வருபடலம் 11 வது கவி)

"ஆவதெல்லேயின் நடுக்கமுற்று அஞ்சியே அங்கண்
மேவு மாதர் மெய்வியர்த்தனர் அவ்வியர்ப் பதனிற்
தேவ தேவனது அருளினுல் தினகரத் திரள்போல்
ஒவிலா விறல் வீரர்கள் இலக்கர் வந்துதித் தார்."

ஈஸ்வரியானவள் கோபித்துக் கூறியதைக் கேட்ட சத்திகள் நடுக்குற்றுப் பயந்து மெய்வியர்க்க அவ்வியர்வையில் சிவ பெருமான் திருவருளால் சூரியத் திரள்போல மிகுந்த வலிமையுடையவர்களாக இலட்சம் வீரர்கள் உண்டாகிச் சிவபெருமான் சன்னிதானத்தில் வந்து வணங்கி நின்ருர்கள். உடனே அவர்களேக் கண்ணுநல் கனிந்து நோக்கிக் கூறுவார்.

(உ-ம். கந்தபுராணம். துணேவர் வருபடலம் 14வது கவி)

"மைந்தர் கேண்மினே நீவிர்கள் யாவரும் வயத்தால்
இந்திராதியர் பகைவரை அடுவதற்கு எமது
கந்தவேள் படை ஆகுதிர் என்னவே கழறி
முந்து பேரருள் செய்தனன் யாவர்க்கு முதல்வன்"

'நீவிர் வலியோடு மித்திராதியர் பகைவரைக் கொல்வதற்கு நமது குமாரன் அனுசராய் சண்முகன் துணேவராம் அவனுக்குப் படைத் துணேவராவீர்' என்று கிருபை செய்தனர். பின்பு நவசக்திகளும் பார்வதியாருடைய சாபத்தால் அனேக காலம் வருந்தி அம்பிகைக்கு அடிமை செய்திருந்தனர். அவர்கள் கருப்பத்துள் நந்திதேவர் முதலிய சிவகணத் தலேவர்கள் பாலராக வளர்ந்து ஒப்பில்லாத காளேப் பருவம் உடையவராகி, நன்னெறி பொருந்தி சுகப்ரம ரிஷியைப் போல் தங்கள் தங்கள் தாய்மார்கள் கருப்பத்துள் பரமசிவத்தைத் தியானித்து யோகு செய்து வீற்றிருந்தார்கள். அதனுல், சக்திகளுக்குப் பாரம் மேம்பட்டுத் தாங்கக் கூடாமையால் நவசக்திகளும் பார்வதியையும் பரமசிவனேயும் வணங்கி 'நெடுநாளாக இச் சூலினுல் நொந்தனம், இனிமேல் தாங்ககில்லோம் அம்மணி!

தயை செய்ய வேண்டும்' என்று பரிபவத்துடன் அஞ்சலி செய்ய, உடனே பரமசிவம் பார்வதியைப் பார்த்து, 'பெண்ணே! உனது சாபத்தால் வருந்தும் இம்மாதரைப் பாலரைப் பெறும்படி அனுக்கிரகிப்பாய்' என்று கட்டளையிட, உமையவள் மகிழ்ந்து சத்திகளைக் கிருபையோடு நோக்கி, 'நீவிர் மிகுந்த வலியினரான பிள்ளைகளைப் பெறக் கடவீர்' என்று கட்டளையிட, உடனே அம்மாதர்கள் பாலரைப் பெற்றார்கள்.

(உதாரணம்: கந்தபுராணம். துணைவர் வருபடலம் 23வது கவி)

"பரிபுரந்தனின் முன்வரு மங்கையர் பரைதன்
கருணைகொண்ட சொற்கேட்டலுங் கவற்சியை அகன்று
விரைவின் மேலவர் பதம்பணிந்து ஏத்தியே கொண்டு
ஒருவி மைந்தரை அளித்தனர் யாவரும் ஒருசார்"

நவசக்திகளும் பார்வதியாருடைய திருவருளினால் உதித்த வீரவாகு தேவர் முதலிய வீரர்கள் தங்கள் தாய்மார்களுடைய நிறத்தோடு பீதாம்பரங்களை உடுத்துக் கருப்பத்துள் இருந்த நாள்களுக்குத் தக்க காலத்தோடு கூடிய அவயவங்களோடும் அச்சக்திகளினது நாபியின் வழியாகப் பிரமதேவனைப் போல அயோனி சம்பந்தர்களாகவே உதித்தார்கள்.

(துணைவர் வரு படலம் 34வது கவி)

"இந்தவீரர் ஒன்பதின்மரும் ஈசனது அருளால்
தந்தம் அன்னையர் நிறங்கொடு பொலன்று கிராங்கி
வந்து பற்பகல் வளர்தரும் உறுப்பொடு மடவார்
உந்தியின்வழி நான்முகத்து அண்ணல்போல் உதித்தார்"

இவ்வாறு உதித்த வீரவாகு தேவர், வீரகேசரி தேவர், வீரமாமகேந்திர தேவர், வீரமாமகேச்சுர தேவர், வீரமாபுரந்தர தேவர், வீரராக்கத தேவர், வீரமார்த்தாண்ட தேவர், வீராந்தக தேவர், வீரதீர தேவர் முதலான நவவீரர்களும் உமாதேவியாரோடும் பரமசிவனையும் வணங்கி நின்றார்கள். பரமசிவம் பார்வதியைப் பார்த்து, 'பெண்ணே! இவர்கள் மிகுந்த அறிவும் பராக்கிரமமும் அழகும் மானமும்

கையெனப் பெற்றவர்கள். இவர்கள் நம்முடைய மைந்தர்கள் ஆவர். யாரோ புதியர் என்று எண்ண வேண்டாம். நந்தி கணத் தலைவர்கள் !'' என்றான்.

(உதாரணம்—கந்தபுராணம்.)

''அந்தமில் விளையாட்டுள்ள அறுமுகக் கடவுள் தன்னைத்
தந்திடும் எல்லை யன்னோன் தானையந் தலைவராக
முந்திய விறல்சேர் மொய்ம்பான் முதலியர் இலக்கத்து
ஒன்பா
நந்திதன் கணத்தினோரை நங்கை பால் உதிக்கச்
செய்தான்''

(துணைவர் வரு படலம் - 35வது கவி)

''உதிதரும் இத்திறல் வீரர் அரியணைமேல் அம்புடன்
உரைத்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலும் அவர் கண்டு பார்வதியைப்
பரிவான் நோக்கி
மதியுமிகு திறலுமொழி மானமும் கையெனப் பெறுநம்
மைந்தர் இன்னோர்
புதியர்அலர் நந்திதனிக் கணத்தவர் என்றான் சுருதிப்
பொருளாய்நின்றான்.''

(ஷை படலம் — 36 வது கவி.)

''தேவியது கேட்டி மைந்தருக்கு அயில் அருள, அவர்க்கு
எல்லாம் சிவன் வெவ்வேறு
தாவில் சுடர்வாள் உதவி வியர்ப்பில் வரும்ஓர் இலக்கந்
தனையரோடு
நீவீர்களும் ஒன்றி நுங்கட்கு இறைவனாகிய சேயை
நீங்கலின்றி
ஏவல் அவன் பணித்தன செய்தொழுகுதிர் என்றான்
அவரும் இசைந்து தாழ்ந்தார்.''

'இவர்கள் சாமானியர் அல்லர். ஒப்பற்ற நந்தி கணத் தவர்கள்' என்று எம்பெருமான் திருவாய் மலர்ந்தவுடன் தேவியார் மகிழ்ந்து திருவருள் சுரந்து ஒவ்வொருவருக்கும் குந்தம் என்னும் வேலாயுதத்தைக் கொடுத்தனள். பரமசிவம் அவர்களுக்கு வாளாயுதத்தைக் கொடுத்தருளி 'நீவிர் உங்கள் துணைவர்களான இலட்சம் வீரருடன் சேர்ந்து வாழ்ந்து உங்க ளுக்கு எல்லாம்முன் பிறந்த கந்தவேளுக்கு இயைய அவன் பணிபுரிந்து வாழ்வீர்' என்று அனுக்கிரகிக்க, அவ்வாறே வாழ்ந்திருந்தனர். இவர்கள் தாய்மார்களான மாணிக்கச் சத்தி, தரள சத்தி, புட்பராகச் சத்தி, கோமேதகச் சத்தி, வைடூரியச் சத்தி, வைரச் சத்தி, மரகதச் சத்தி, பவளச் சத்தி, நீலமணிச் சத்தி முதலான நவசத்திகளும் பார்வதி தேவியார்க்குப் பணி புரிந்து வீற்றிருந்தார்கள்.

(உதாரணம் - கந்தபுராணம். துணைவர் வருபடலம் 37வது கவி)

"ஒன்பானும் இலக்கத்தோர் ஓர் இலக்கத்தோர் தம்மோடு
ஒன்றிப் புல்லி
அன்பாகி எம்பெருமான் சின கரத்தை அகலாமல்
அங்கண் வைக,
மென்பானல் புரையும் விழிச்சத்திகள் ஒன்பதின்
மார்களும் விமலக் கன்னி
தன்பாலை இகவாமல் அவள் பணித்த தொழில் புரிந்து
சார்தல் உற்ருர்"

பின்னர் தேவர்கள் வேண்டுகோளால் விமலன் விடை மீதேறி வீரர் புடை சூழ தேவர் இருபுறந்தாழ சரவணப் பொய்கைக் கரையில் வந்து தங்கி, தமது வாமபாகத்தில் வீற்றிருக்கும் உமையவளை நோக்கி, சரவணத்திடை வளர்ந்து கொண்டிருக்கும் நமது குமாரனைச் சென்று எடுத்து வருவாய் என்னலும், இறைவி அவ்வாறே சென்று அக்குழவிகள் ஆறையும் தமது திருக்கரத்தாலும் வாரி மார்போடு அணைத்து

சேர்த்தனள். சேர்த்தவுடன் ஆறுமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுமாக ஓர் உடலாய் விளங்கின. முருகக் கடவுளை எடுத்து விடைமீது ஏறித் திருக்கையிலையை அடைந்தனர். கைலாயத்தில் சண்முக தேவர் தமது சகோதரர் இலட்சத் தொன்பதின்மர் புடைசூழ அற்புத விளையாடல் செய்திருக்கும் காலத்தில் பரம சிவத்திற்கு பிரிதி தரத்தக்கதாக நாரத முனிவர் ஒரு யாகம் செய்தனர். அந்த யாகத்தில் செக்கர் வானத்தினை ஒத்த தேகத்தோடு ஆட்டுக் கிடாவானது ஊழிகாலத்தில் சராசரப் பிரபஞ்சங்கள் அனைத்தையும் நாசம் செய்ய எழுந்த பிரசண்ட மாருதமும் வடவாமுகாக்கினியும் வானத்திற் பரவிய மேகங்களிடத்து உண்டாய் முழங்கும் இடிக்கூட்டமும் ஒன்றிக் கலந்து ஓர் உருக்கொண்டு வந்தது ஒப்ப ஆர்ப்பரித்து, அவிர்ப் பாகம் பெற வந்த தபதியர் முதலினோரைத் தனது கூர்மை பொருந்திய கொம்புகளால் துன்பப்படுத்தி வருத்தி வருவதை ஆற்ருத விருடியர், வானவர் நானுவிடங்களில் ஓடி ஒளித்துச் சிதறினர். வேள்வித் தலைமை வகித்த நாரதர் இதனை அறிந்து சிந்தாக்கிரந்தராய் மனதில் ஆற்ரு வேதனை மேலோங்க ஏது செய்வது எனத் தோற்ருராய், முடிவில் பராக் கிரம சாலிகளான நவவீரருடன இலட்சம் வீரர் புடைசூழக் கையிலையில் வீற்றிருக்கும் கந்தசுவாமியிடம் முறையிட, கந்த வேள் திருவுளம் இரங்கி ‘அஞ்சன்மின்’ என அருளி, தமது இளவலான வீரவாகுதேவரை விளித்து, ‘அங்கினியில் தோன்றின ஆட்டுக்கிடாவை எங்கிருப்பினும் தேடிக்கொண்டு வரக் கடவது’ என்றனர். விடைபெற்ற வீரவாகு தேவர் மண்டல காரமாய் கடல் சூழ்ந்திருக்கும் பூவட்டத் தெல்லையும் சப்த லோகங்களினும் தேடிக் காணுது, பிரமலோகத்தில் தனக் கெதிர்ப்படுவோர் ஒருவரும் காணுது தருக்குற்றுத் திரியும் அவ் வாட்டை ஆக்ரமித்து அதன் கோட்டைப் பற்றி வலித்து ஒரு நொடியில் கைலைக்கு கொண்டுவந்து சண்முக தேவருக்கு வாகனமாக்குவித்தனர். பின்னர் நாரத முனிவர் எஞ்சிய யாகத்தை நிறைவேற்றி மகிழ்ந்திருந்தனர்.

(உதாரணம்—கந்தபுராணம்—தகரேறு படலம் 21வது கவி)

ஆடலந் தொழின் மேற்கொண்டே அனைவரும் இரியச்
செல்லு
மேடம் அஞ்சுறவே ஆர்த்து விரைந்துபோய் வீரவாகு
கோடவை பற்றி ஈர்த்து கொண்டுராய் கைலை நண்ணி
ஏடுறு நீபத் தண்தார் இளையவன் முன்னர் உய்த்தான்''

(ஈட்டி எழுபது வேது கவி)

"ஓதிய வேள்வியின் உவப்ப நாரதன்
போத வேதகர்தனைப் பொங்கு தீத்தர
வேதனைப் படுப்பதை விரைந்து கட்டியே
சேதனர்க்கு உதவின திருச் செங்குந்தமே''.

பின்னர், தேவர்கள் வேண்டுகோளின்படி சண்முகக் கடவுள் தம்பியரான இலட்சத்து ஒன்மதின்மர் புடைசூழ இரண்டாயிரவெள்ளம் பூதகணங்கள் புடைசூழச் சென்று மாயாபுரத்தில் தாருகா சூரனையும் கிரவுஞ்ச சூரனையும் கொன்று, பின்னர் இராதா ரூடராகத் தென்திசையை நோக்கிச் சென்று தேவகிரியில் சிலகாலம் தங்கிப் பின்பு திருக்கேதாரம், காசி, ஸ்ரீசைலம், திருவேங்கம், திருத்தணிகை, காஞ்சி, திருச்சேஞ்சலூர், பழனி முதலான தலங்களில் தங்கிப் பின்னர் திருச்செந்தூரை அடைந்து, அங்ஙனம் தேவதச்சனால் அலங்கரிக்கப் பட்ட பாசறையில் வீற்றிருந்து, தமது இளவலான வீரவாகு தேவரை விளித்து 'நீ சென்று சூரபன்மனுடைய எண்ணம் அறிந்து வருவாய்' என உடனே வீரவாகுதேவர் சண்முக தேவர் அடிபணிந்து 'ஐயனே! தங்கள் கட்டளைப்படி சூர பன்மனுடைய வீரமயேந்திராபுரிக்குத் தூதாகச் சென்று, தேவர் சிறையை விடும்படிக் கேட்டு, அவன் அபிப்ராயம் அறிந்து வருவேன்' என்று சொல்லிச் சென்றார்.

(உதாரணம் : கந்தபுராணம் : வீரவாகுதேவர் கந்தமாதனம் செல் படலம்)

"வெந்திறல் அவுணர் ஈண்டும் வீரமா மகேந்திரத்தில்
சுந்தரத் திருவின் வைகுஞ் சூரபத்மாவின் முன்போய்
எந்தை நீ அருளிற்றெல்லாம் இசைத்து அவன்உள்ள நாடி
வந்திடுகின்றேன் என்று வணங்கியே தொழுது
போனான்"

இவ்வாறு வணங்கிச் சென்ற வீரவாகு தேவர் கந்தமாதன பர்வத்தின் முடியில் நின்று, தமது திருவடியில் அணிந்த வீர கெண்டைகள் கலிக்க இருந்தார்.

(உதாரணம் : கந்தபுராணம் வீரவாகு தேவர் கந்தமாதனம் செல்படலம் 18வது கவி)

"அலங்கலம் திரைகொள்நேமி அகன்கரை மருங்கின்மேரு
விலங்கலின் உயர்ந்த கந்த மாதன வெற்பு தன்னில்
பொலன் குவடு உச்சிமீது பொள்ளென இவர்தல் உற்றான்
கலன் கலன் கலன்.அம்பொற் கழலமர் கழல்கள் ஆற்ப."

இவ்விதம் கந்தமாதன கிரியில் ஏறி அக்கிரி குலுங்கும் படியாக எழுந்து கடலிற் பாய்ந்து வீரசிங்கனை வதைத்து இலங்கையைக் கடலில் அமிழ்த்தி அதிவீரனை அதம் செய்து மகேந்திரம் சென்று கீழ்க் கோட்டையில் காவல் புரிந்து இருந்த கயமுகா சூரனைக் காலன் ஊருக்கு அனுப்பி, அந்நகரத்துள் சென்று, சிறைப்பட்டிருந்த இந்திர குமாரனாகிய சயிந்தனைக் கண்டு தேற்றி சூரனானவன் நவமணிகளால் இழைத்த சிங்காதனத்தில் அசுர கூட்டங்கள் புடைசூழ எவரும் எதிரில்லாமல் இறுமாந்து வீற்றிருக்கும் கொலுமண்டபத்தைக் கண்டு அவன் அதிக உயரத்தில் இருத்தலால். தாம் அவன் கீழடங்கி இருத்தல் தகாதென சண்முக தேவரை மனத்தில் நினைத்தார். கந்த சுவாமியின் மகிமையால் ஆகாயத்திலிருந்து இறங்கின தெய்வீக விமானத்தின் மேல் இவர்ந்து, சூரனானவன் நிமிர்ந்து

பார்க்கும்படியாக அவன் தலைக்குமேல் மண்டி போட்டுட் கார்ந்து, 'வெற்றிவேல் வாழி!' என்று, கந்தவேளை எந்த வேளையும் மறவாச் சிந்தையனான வீரவாகுதேவர் வீற்றிருந் தார். இவ்வதிசயம் அனைத்துங் கண்ட சூரனானவன், கருமான் உலையில் காய்ந்த இரும்பெனக் கண்கள் சிவப்புறக் கனன்று, 'அடா, அற்பனே! நீ யார்? நம்முடைய சபையில் பிரமன், விட்டுணு, தேவேந்திரன் முதலானவர்களும் வரப் பயப்படும் படியான இடத்தில், அச்சமில்லாமல் வந்ததும் தவிர என் தலைக்குமேல் சிம்மாதனமிட்டு மண்டியிட்டு இறுமாந்திருப் பவன், சீக்கிரம் தெரிவிப்பாய் என்று அண்டங்கள் வெடிக்கும் படியான கோபவார்த்தையாகக் கூறினான். அவ்வார்த்தை யைக் கேட்ட வீரவாகுதேவர் புன்னகை செய்து. 'கேளும், சூரபத்மனே! நின் இளவலாகிய தாருகா சூரனையும் கிரவுஞ்ச கிரியையும் தொலைத்த வேலாயுதத்தைக் கொண்டருளும் முருகக் கடவுள் தூதன், என் பெயர் 'வீரவாகு' என்பர். நின்னையும் இட்சணமே எமன் உலகத்துக்கு அனுப்புவர். ஏதோ உன்பேரில் கருணை வைத்துத் தேவர்களைச் சிறை விட்டு வாழ்வது இஷ்டமா? அல்லது நமது வெற்றிவேலால் துளைப் பட்டுச் சாவது இஷ்டமா? உன் அபிப்ராயம் அறிந்து வரும்படி என்னைத் தூதாக அனுப்பினார். நீ சிறை விடாயேல், நீ வேலினால் இருபிளவாய் மாண்டு போவதற்கு ஐயமில்லை. உன்னுடைய எண்ணத்தைத் தெரிவிப்பாய் என்றனர்,

(உதாரணம் : கந்த புராணம் : மகேந்திரகாண்டம்
அவைபுகுப டலம் - 107 வது கவி)

"அண்டர் ஆற்றலை அவ்விய தாரகனாவி
உண்ட கொற்ற வேலிருந்தது விடுத்திடின் உனையும்
கண்ட துண்ட மதாக்குமால் அறநெறி கருதி
தண்டம் வல்லையில் புரிந்திலன் இத்துணை தாழ்ந்தான்"

ஷ படலம் 108 வது கவி

"கெடுதலில்லா தேர் அமரர்கள் சிறையிடை கிடப்ப
விடுதல் செய்தனை பல்லுகம் அவர்தமை இன்னே
விடுகலுய் வகை யாகுமான் மறுத்திடில் விரைந்து
படுதலே நினக்கு உறுதியா முடியும் அப்பரிசே"

இவ்விதமாக வீரவாகுதேவர் சொல்லி முடிக்குமுன் அடங்காக் கோபங் கொண்டு பற்களை நறநற வென்று கடித்து ஊழி காலத்து ருத்திர மூர்த்தி எனக் கண்களில் நெருப்புப் பொரி பறக்க நாக்கைக் கடித்துக் கைகளோடு கைகளைத் தட்டினன்; புஜங்களைக் கொட்டினன். அண்டங்களை எழுந்து தலையால் முட்டினன். 'அடா, தூதனே! ஆயிரமுகங்களைக் கொண்ட எங்களை ஆறுமுகம் கொண்ட பாலன் வென்று தேவர்சிறை மீட்பான்? உன்னையும் கடித்துத் தின்று விடுவேன்; நீ தூதன் ஆனபடியால், உன் உயிரைப் பிச்சையாக அளித்தேன்; உயிர்த் தப்பி ஓடிப்போ! என்றான். மறுபடியும் வீரவாகு தேவர், 'கேளும், சூரபத்மனே!' என்று சண்முக தேவர் புகழைக் கூறுவார். (ஷ படலம்—131வது கவி)

"எங்கணும் பணிவதனங்கள் எங்கணும் விழிகள்
எங்கணும் திருக்கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக்கழலடி எங்கும் அவ்வடிவம்
எங்கணும் செறிந்தருள் செயும் அறுமுகத் திறைக்கே"

— என்று வீரவாகுத் தேவர் கூற

சூரன் அதிக கோபம் கொண்டு ஆயிரம் இராட்சதரைக் கூவி, வீரவாகு தேவரைப் பிடித்துக் கட்டிடும்படி ஏவினன். வீரவாகு தேவர் அவர்களை எல்லாம் சின்னபின்னப்பட வாட்டி மத்திற்பட்ட தயிர் எனச் சிதைத்தார். அதைக் கண்ட சதமுகன் வந்தெதிர்க்க அவனையும் அவன் சேனை ஆயிரம் வெள்ளம் இராட்சதரையும் தமது இரண்டு கரங்களினாலும் வாரி, கற்பாறையின் மேல்மோத, நெற்போரை ஒப்ப சூரன் அரசியற்றும் மகாமண்டபக் கல்தூணில் மோதி மாய்த்துச் சில

அரக்கரைக் காலினால் தேய்த்து, ஆகாய மார்க்கமாய்க் கிளம்பி, சந்திர மண்டலம் வரையில் வளர்ந்திரா நின்ற மாடகூடங் களைக் காலினால் எற்றி, காற்றில் பறக்கத் தூற்றித் திரும்பு கையில் சூரன் அடங்காக் கோபங் கொண்டு. ஆயிரமுகங் கொண்ட கோரன், அதிகோரன் என்னும் இரண்டு தளகர்த்தர் களையும் அனுப்பி, வீரவாகு தேவரைப் பிடித்துக் கட்டிக் கொண்டு வரும்படி ஏவ, அவ்விரு வீரரும் ககன மார்க்கமாய் விரைந்து கடலொலி என இரைந்து காற்றைப் போல் பறந்து, கதிரவனும் அச்சம் அடையும்படி அரற்றி. 'யாரடா, தூதனே! நில்லடா, நில்லடா' என்று உரத்துக் கூவினதைக் கேட்ட, வீரவாகு தேவர் திரும்பிப் பார்த்து, இவர்களுக்கு கால முடிவு என்று உணர்ந்து, கண்கள் சிவப்புற புயங்களைத் தட்டி ஆண் சிங்கமெனக் கண்டவர் கலங்க நின்றார். உடனே வீரசூரர் களான அரக்கர் உருத்திர சங்கார மூர்த்தியைப் போல் வெகுண்டு கையில் இருந்த இருப்புலக்கையைக் கரகர என்று சுழற்றி, கோடையிடியென வீரவாகு தேவர் புயத்தின் மேல் மோதினார்கள். வீரவாகு தேவர் குபீரென்று எழும்பி அவ்வீரர் களுடைய சிகையைத் தமது இருகரங்களாலும் புடித்து. சந்திர சூரிய மண்டலம் வரையில் சென்று, பூமியில் விழும்படி எறிந்து, தமது இரண்டு பாதங்களாலும் அவ்வரக்கரை மிதித்து அவர் களுடைய இரண்டாயிரம் தலைகளையும் தன்னைப் பிடித்துக் கட்டி வரும்படி அனுப்பின சூரன் அவையிற் போய் விழும்படி, பனங்காய் புட்டெறிவது போல் எறிந்தார். பின்னர் சூரன் மகனான வச்சிரவாகு வந்து எதிர்த்தான். அவனைப் பலவித மாய் வாட்டி அவன் ஆயிரவெள்ளஞ் சேனைகளையும் எமபுரம் ஓட்டி வச்சிரவாகுவின் முதுகுத் தண்டெலும்பை எடுத்து வீர மகேந்திரக் கோபுரத்தில் நாட்டி, அதன் சிகரத்தில் அவன் தலையை வீர கண்டா மணி எனத் தீட்டி, அவன் தசைகளால் நான்கு புரத்திலும் கப்பியாக மாட்டி அதன் மேலேறி விளை யாடி அங்கு நின்று மீண்டும் திருச்செந்தூரை அடைந்து நடந்த விஷயத்தைக் கூறினார்.

(உதாரணம் :- கந்தபுராணவகவல் :- வீரவாகுதேவர் கம்பம் ஆடினதற்கு)

மதமிகு வச்சிரவாகு என்பவனை
அதமுறச் செய்து அவன் முதுகெலும்பைக்
கம்பமதாகக் காசினி யோர்கள்
சம்பிரமாய்ப் புகழ்ந்து அழைத்த மகேந்திர
மாபுரிக் கோட்டை வானுலகுத் தர
கோபுரந் தன்னில் கோணமல் நாட்டி
நாற்றிசை தனக்கும் நரம்பதைக் கயருய்
, பார்த்தவர் மகிழும்படி அதைக் கட்டி
அங்கைகள் தன்னை அட்டமா திரியாய்
புங்கமாய் பூட்டிப் பொற்புறு சிரசை
மிக்கவே வீரகண்டா மணியாக
தக்கசீர் கம்பந்தனிலே மாட்டி
கச்சிமா நகர்வாழ் காமாட்சி தன்னை
நிச்சயமாக நினைந்து உச்சரித்து
வாகுள்ள வீரவாகு என்பவரும்
வேகமாய் கம்பமீதினில் ஏறிக்
காதலாய் அனந்த கரணங்களைப் போட்டு
விண்டுவைப் போல விசுவரூபங் கொண்டு
எண்டிசை அதிர இலங்கையில் குதித்து
அழிமாமுகனை அங்கு சங்கரித்து
கோளறி யெனவே குதித்து மேலெழும்பிச்
செந்தின் மாநகரைச் சீருடன் நோக்கிக்
கந்தவேள் அடியிற் கடுகி வந்தனரே''

பின்னர் தேவர்கள் வேண்டுகோளின்படி சண்முகதேவர் தமது சகோதரர் புடைசூழ பூதகணங்களுடன் வீரமகேந்திரம் சென்று சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் முதலிய கணக்கற்ற அசுரர்களைக் கொன்று, சூரனுடைய புலிக் கொடியைப் பறித்து, வீரவாகு தேவருக்குக் கொடுத்து வீர

2

மயேந்திரா புரியைச் சமுத்திரத்தினால் மூடிக்கொள்ளும்படிச் செய்து கந்தமாதனம் சேர்ந்து ககனரும் கனிட்டரும் நாள்தோறும் பரவ வீற்றிருந்தார்.

ஸ்ரீ சண்முகதேவர் கந்தமாதனத்தில் இலட்சத்து ஒன்பதின்மர் புடைசூழ வீற்றிருக்கிற காலத்தில் பூலோகத்தில் திருக்கருவூரில் அரசாட்சி செய்திருந்த சூரிய குலத்தில் வந்த மனு மாந்தாதாவின் கால்வழி வந்த முசுமுகசோழன் என்னும் அரசன் தன்னுடைய குருவான வசிட்டர் வாக்கியப்படி செய்த சஷ்டி விரதத்தில் சண்முகதேவர் சகோதரர் சமேதராய்ப் பிரசன்னமாய் அரசனைக் கருணையுடன் நோக்கி 'அன்பனே! யாம் பிரசன்னமானோம். நீ இந்த அரிய தவத்தை யாது பிரயோசனம் கருதிச் செய்தாய்? அதை நமது சன்னிதானத்தில் கேட்கக் கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

(உதாரணம் :- கந்த விரத விலாசம்)

தென் பெருங் கருவூர் ஆளும் தினகரன் குலத்தில்வந்த
அன்பனே நீதான் இந்த அருந்தவம் புரிவதென்னே
என்பலன் கருதிவந்தாய் இகத்திலுன் தவ மகிழ்ந்தோம்
நன்பலன் தருவோம் அஞ்சேல் நம்முன முரைசெய் வாயே''

உடனே அரசன் பேரானந்தம் அடைந்து பூமியில் விழுந்து பணிந்து எழுந்து, வேதவாக்கியங்களால் துதித்து, 'ஐயனே! உருவமாகியும் அருவமாகியும் விளங்குகின்ற சிவ குமாரனே! போற்றி. இந்தப் பெரிய பூமியை யானே ஏகச் சக்ரேசனாக ஆளும் பொருட்டுத் தேவரீர் பக்கத்தில் வீற்றிருக்கும் தம்பிமார்களை எனக்கு வரப்பிரசாதமாய்த் தர வேண்டும் என்றனன்.

(உதாரணம் : கந்த விரத விலாசம்)

உருவமாய் அருவமாகி ஒளிர்சிவக் குழந்தாய்போற்றி
சரவணபவனே போற்றி சண்முகத் தவனே போற்றி
இரு நிலமுழுதும் நானே ஏகச்சக்கரேசனுகத்
தருக, நின்அருகில் சூழும் தம்பியார் எவருமின்றே''

உடனே சண்முக தேவர் கிருபை கூர்ந்து, தமது சோதரரைப் பார்த்து, இவ்வரசன் உங்களைப்போல் என்னிடத்தில் மிகுந்த பேரன்புடையயவன் ஆதலால், நீங்கள் சில காலம் இவ்வரசனுக்குப் படைத்துணைவராய் இருக்கக் கடவதென்று கட்டளையிட்டார்.

(உதாரணம் : கந்தபுராணம் : கந்தவிரதப் படலம்
29-வது கவி)

''நோற்றல் கூடிய முசுமுகனும் மினுமெம்பால்
ஏற்றமே தரும் அன்பினுன் எழுகடற் புவியும்
போற்ற வைகுவான் நீவிர்கள் ஆங்கவன் புடையே
ஆற்றல் சான்றிடு துணைவராய் இருத்தி என்று
உரைத்தான்''

அவ்வார்த்தையைக் கேட்ட வீரவாகு தேவர் முதலியர் அதற்கு இசையாராய்த் 'தேவரீருடைய துணைவரும் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் அதிபனுன சூரபன்மனுதிய தேவ கண்டகரை எல்லாம் போரில் அழித்து வெற்றிகொண்டிருக்கும் யாங்கள் இச்சிறு மானுடன் பாங்கர் எய்தி இவனுல் பணிக்கப் படும் இழிதொழில்களைப் புரிகிலோம்' என்று மறுத்தார்கள்.

(உதாரணம் : கந்தபுராணம் : கந்தவிரதப் படலம்.
30-வது கவி)

''முழுதருள் புரிதரும் கடவுள் சொல்வினவியே முடிவ
தில்லாச்
செழுமதித் தண்குடைச்சூர் குலந்தணை அடும்திறலி
னேங்கள்

பழிபடப் பானுவின் வழிவரும் சிறுமகன் பாங்கராகி
இழிதொழில் புரிகிலோம் என மறுத்துரை செய்தார்
யாரும் வீரர்."

அவ்வார்த்தையைக் கேட்ட கந்த சுவாமியார் முனிந்து, நீவிர் நம்முரையை மறுத்த படியால், நீவிர் மானுடவராய் இவ்வரசன் சேனைகளுக்குத் தலைவர்களாகவும் அவனுக்குத் துணைவர்களாகவும் இருப்பதுடன் உங்களுக்குள்ள பூர்வ வினைப்படி, யாம் சூரசம்மாரம் செய்து தெய்வலோகம் வந்து தெய்வயானையைக் கலியாணம் செய்து கொண்ட மணப்பந்தலில் முந்தியிருந்த தேவமாதர் உங்கள் யவ்வனத்தைக் கண்டு மோகித்தார்கள். நீங்களும் அவர்கள் சுந்தரத்தைக் கண்டு இச்சித்தீர்கள். அவ்வினைக் கீடாக மக்கட் பிறவியைக் கொடுத்து ஊட்டுவிக்கிறோம். இது இரகசியம். நமது மாதாவாகிய ஈசுவரியால் கொடுக்கப்பட்ட செங்குந்தத்தினால் உலகமுழுதும் வென்று ஏக சக்ராதிபத்தியம் இவ்வரசனுக்களித்து, என்னால் சூரசம்காரம் செய்து அவனிடத்திலிருந்து பறித்து உங்களுக்குக் கொடுத்திருக்கும் புலிக் கொடியை இந்த உலகத்தில் நிலைபெற, வெற்றிக்கொடியாக நாட்டி, உங்களை இச்சித்த அரம்பையர் சோழராச பெண்களாய் வந்தவதரிப்பார். அவர்களை மணந்து நவவீரரில் முதல்வீரனை உன் மரபினர் என்னும் பெயர் தோன்ற வர வாகு என்பதில் வாகு என்பது கையெனவும் வீரம் என்பது கோள் எனவும் இவ்விரு கூற்றும் புணர்த்திய தொடர்மொழியில் ஆர் என்னும் உயர்திணைப் பன்மைப் பலர்பால் விகுதி சேரக் 'கைக்கோளர்' என்னும் பெயரையுடைய செங்குந்த குலத்தை அபிவிருத்திச் செய்து வைத்து நமது பதவிக்கு வரக் கடவது' என்று கட்டளை இட்டனர்.

(உதாரணம்: கந்தபுராணம். கந்தவிரதப் படலம்.
31-வது கவி)

"ஞான நாயக நவர் மொழிதனைத் தேர்ந்து நம்முரை மறுத்தீர்
ஆனதோர் பான்மையால் நீவிர் மானுடராய் அவனி மன்னன்
தானை நாயகர் நற்றுணை வருமாகிப் பின் தலைவன் ஏக
வானுளோர் புகழவே நோற்று நம்பக்கலில் வருதி என்றான்"

(உதாரணம்: கந்த விரத விலாசம்.)

"அந்தநாள் சூரபத்ம அசுரனைக் கொன்று நாகம்
வந்து தெய்வயானை தன்னை மணஞ்செயுபோதக் கூட்ட
முந்தரம்பையர்களும் மைமோகமே கொண்டார் அன்னோர்
சுந்தரம் நீங்கள் கண்ட தொடர்பிதெம் இளவலீரே
அன்னையால் தந்தகுந்தம் அங்கைகொண்டு உலக மெல்லா
மன்னனுக்காக்கி நம்மால் வழங்குவெம்புலி பதாகை
தன்னையே யுயர்த்திச் சோழத்தலைவர் பால் பிறந்ததேவ
கன்னியர் மணந்து கைக்கோள் குலமிகக்கண்டு வாரீர்"

அக்கட்டளையை ஏற்ற வீரவாகு தேவர் முதலியர் வணங்கி, 'சுவாமி அறிவிலேங்கள் பிழையைப் பொறுத்து, இரட்சிக்க வேண்டும்' என்று வணங்கி அம் முசுமுகச் சோழனுக்குத் துணைவர்கள் ஆமாறும் ஆனவதனும் ஏற்று நின்றார்கள்.

(உதாரணம் : கந்தபுராணம் ஷ படலம் 32-வது கவி)

‘‘ஐயன் வாய்மொழியினுல் வீரமொய்ம்புடைய அனுதி
யாதோதி
துய்ய மானுடவராய் தொல்லை நாளுடையதோர் சுதன ஞோர்
மேந்ன
மெய்யெலாம் வியர்வுறப் பதைபதைத் தோங்கியே மற்று
விழும மிக்கு
பொய்யரேம் பிழைபொறுத்தருடியால் என்று க்குப்
பொன்னடி பணிந்தார்
நார்’’

இவ்வாறு சண்முக தேவர் கட்டளைப் படிமான வதனுப் பெற்ற வீரவாகு தேவர் முதலிய வீரர்கள், கந்தவேளை நோக்கி, ‘‘கர்த்தனே! அடியேங்களுக்கு மானவ தேகங் கொடுத்ததும் தவிர சோழவரசர் மரபில் வந்த தேவமாதர் களைச் சேர்ந்து, நமது குலத்தைப் பூலோகத்தில் விருத்தி செய்யும்படி கட்டளையிட்டீர். யாங்கள் மனைப் புத்திராதி மாயையால் கெட்டு, தங்கள் திருவடித் தொண்டு மறந்து பிறவிக்கு வித்தாய் விடுமே. மேலும், குடும்பப் பாரம் தலைக் கொண்டவர்க்கு அல்லல் விடும் பரிசு இன்மையாலும், ‘தீபரமெய்யுணர்வு எங்கஞ முத்தீபர’ வென்னும் சாத்திரம் இருக்கின்றதே என்று பரிபவத்துடன் சொன்ன தம்பியர்களைப் பார்த்து, ‘என் அன்பிற்குரிய தம்பியர்களே! உங்களை அம்மா யையானது அகங்காரத்தைக் கொடுத்துத் தன்வசப்படுத்து முன் நாம் அறிந்து விலக்கிக் கிருபை செய்வோம். நமக்கு நொடிப்போதாகிய ஆயிரவருடகாலமும் வாழ்க’ என்று கட்டளை இட்டார்.

(கந்தவிரத விலாசம்)

‘‘ஆன வெந்தன் இளையசு வீரரே
ஏன் அகந்தைத் தரும் தரு முன்னமே
யாம் அறிவித் தருள் தருவோம் நொடி
மான ஆயிர வருடமும் வாழியே’’

இவ்வாறு கட்டளையிட்ட சண்முகத் தேவரை வணங்கி, வீரர்கள் "சுவாமி! அடியேங்களுக்குக் கிருபை செய்து, மாயை நின்றும் தடுத்தாட் கொண்டபடியே நமது குலத்துதிக்கும் நம்முடைய புத்திர பவுத்திரர்களுக்கும் அம்மாயை நீக்கிப் புனிதராக்குவதுடன் இன்னும் அவர்களுக்குவரும் துன்பங்களை விலக்கி, அவர்களுக்குக் குலதெய்வமாகத் தாங்களே முன்னின்று, பிறகு அவர்களையும் தங்கள் பதவிக்குச் சேர்க்க வேண்டும் என்று வேண்ட, சண்முகதேவர் திருவுளம் இரங்கி, அவ்வாறே உங்கள் பிள்ளைகளுக்கும் மாயையை விலக்கி கந்தமாதனஞ் சேர்ப்பதுடன் யாம் பின்னர் திருஞான சம்பந்த மூர்த்தமாக அவதாரஞ் செய்து, அவர்களுக்கு நேரும் இடைஞ்சல் விலக்கித் தடுத்து ஆள்கிறோம். அவர்களுக்கு யாமே தெய்வமாக விளங்குவோம். நீங்கள் இவ்வரசன் பால் ஆயிர வருடம் இருந்து, பின்னர் நமது பதவிக்கு வருவீர் என்று கட்டளை இட்டனர்.

(உதாரணம் : கந்தபுராணம் : கந்தவிரதப் படலம்)

எய்திய மானிடராகிய வீரர்கள் எந்தையை வந்தனை செய்து
உய்ந்தனம்யாம்எனவே மகிழ்வெய்தி உவந்து பின் ஒன்று
அறைவார்
மெய்தரு மாதரோடு இல்லற வாழ்க்கையின் மேவிடின்
எங்கள் சுதர்க்கு
உய்தருமாறு தடுத்தருள் செய்கென ஓதினர் ; வீரர்களே!
விண்ணகர் மேவிய பண்ணவர் உண்ணி வியந்து
தொழத்தகுசீர்
நண்ணிய நீவிர்கண் மண்ணுலகாளு நராதிபன் சேனையதாய்
அண்ணுரி நுங்களை ஆட்கொள வேண்டி அருள் திரு
மேனி எடுத்து
எண்ணரு ஞானசம்பந்தன் எனும் பெயர் எய்திடு
காலையரோ.

''செங்கனகக்கிரி ஒத்த புயாதிப சேவக வீரர்களே
பொங்குரு நும்மரபுக்குயர் தெய்வதமாகிய பொலிந்தருளல்
உங்கண் மொழிப்படியே தடுத்தாண்டருள் ஊட்டி
அளித்திடுதல்
நம்கடனாகும் என, வடிவேலன் நயந்தருள் செய்தனனே''

இவ்வாறு வேலாயுதக் கடவுள் தமது இளதலர்க்குக் கட்டளையிட்டு மன்னவன் முக நோக்கி, நீ நம்மிடத்தில் வரப் பிரசாதமாக இச்செங்குந்தரை அடைந்தபடியால் உனக்கு முசு என்னும் நிலைமொழியோடு குந்தம் என்னும் வருமொழி யைப் புணர்த்தி மூவுலகத்தினரும் முசுகுந்த சக்ரவர்த்தி என்றழைக்கும்படி பெயர் கொடுத்திருக்கிறோம். அப்பெயர் புனைந்து, 'நீடூழி வாழக் கடவை' என்று ஆசீர்வதித்து, நான் மறைக்கும் எட்டாத குமார தேவர் மறைந்து அவர் உள்ளக் கோயிலினும் கந்த மாதனத்தும் வீற்றிருந்தனர்.

(உதாரணம்: கந்தபுராணம்: கந்தவிரதப் படலம்)

''இன்னணம் இவர் ஒழுகுறலும் எம்மிறையுலகிறை கா
நோ
நின்னுறும்பெயரின் மற்றிவரும் வேற்பெயர் நிறுவி டும்
யாண்
சொன்னயம்பெற முசுகுந்த வேந்தாகுஎனச் சொற்றி ய்
நற்
என்ன் நின்றான் மறைதன்னினும் பன்னெனா ''
வியல்பில் நின்றா

(கந்த விரத விலாசம்)

''மனுமுதற் குலத்தில் வந்தமகிபனே சொல்லக் கேளா
உனது நான்முகத்திேனாடு முகந்தவிக்கு உந்த நாமம்
புனைதர முசுகுந்தேசப் புரவலன் எனும் பேர்பெற்று
மனது சந்தோடமாக வாழி நீ வாழிதானே''

சண்முகக் கடவுள் அந்கரார்த்தானமாய் மறைந்த பின்னர், முசுகுந்த மன்னன் வீரவாகு தேவர்களை அழைத்து வந்து தன்னுடைய இராசதானியான திருக்கருவூரில் அவர்களுக்கு வானமளாவிய மாடமாளிகைகளை விதிப்படி சிற்ப சாத்திரிகளைக் கொண்டு நிர்மானித்து. இருக்கை அளித்து இரத கஜ துரக பதாதி முதலிய சேனைகளும் அனேக காணி பூமிகளையும் கொடுத்துத் தனக்குப் பிரதம மந்திரிகளாகவும் தன்னுடைய சேனைகளுக்குச் சேனைபதிகளாகவும் நிர்மானித்தான்.

சேனைத்தலைவர் என்பதற்குப் பிரமாணம் : சேந்தன் தீவாகரம் மக்கட் பெயர் : தொகுதி கைக்கோளரின் பெயர் :

"காருகர் கைக்கோளர் தந்துவாயர் சேனைத்
தலைவர் செங்குந்தராமே."

இவ்வாறு முசுகுந்தச் சக்ரவர்த்தியானவர் வீரவாகு தேவர் முதலான வீரர்களுக்கும் சோழ அரசர் மரபில் வந்து அவதரித்த தேவமாதர்களைக் கலியாணம் செய்து வைத்தார். வீரவாகு தேவர் மணம்முடிந்து சில நாளைக்குள் அவர் மனைவியான புட்பகந்தி வயிற்றில் சித்திரவல்லி என்று ஒரு பெண்ணும் அனகன் சனகன் என்ற இரண்டு ஆண் மகவும் உதித்தன. பின் மற்றுள்ள தம்பியர்களும் தங்கள் தங்கள் மனைவியரோடு சுகித்து ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டு ஆண் மகவுகளையும் அளவற்ற பெண்களையும் பெற்று மனுக்குலத்தொன்றி வாழ்ந்திருந்தார்கள்.

(உதாரணம் : கந்தவிரதப் படலம்-37வது கவி)

"அன்னதோர் காலந்தன்னில் அரம்பையர் அவனியாளும்
மன்னவர் தம்போற் தோன்றி வளர்தலும் வாகை மொய்ம்பின்
முன்னவன் முதலோர்க்கெல்லாம் முசுகுந்த வேந்தன் தந்த
கன்னியர் தம்மைக்கூவிக் கடிமணமியற்று வித்தான்"

(ஷ படலம்—38 வது கவி.)

“அந்தமில் வன்மைசான்ற வாடலம் புயத்தோன்புட்ப
கந்தியென்றுரை பெற்றுள். கன்னிகை தன்னைவேட்டுச்
சிந்தையின் மகிழ்வால் சேர்ந்து சித்திரவல்லி யென்னும்
பைந்தொடி தன்னை யன்பால் பயந்தனன் பதுமமின்
போல்”

(ஷ படலம்—40 வது கவி)

“ஏனைய வீரர்தாமும் இயல்புளி வழாமல் வேட்ட
தேனிவர் குழலாரோடும் சிறந்தஇல் வாழ்க்கைஎய்திப்
பானலங் குதலைச் செவ்வாய் பாலரை நீலவேற்கண்
மானனையாரை நல்கி மனுக்குலத் தொன்றியுற்றார்”

இங்ஙனம் வீரவாகு தேவருக்குப் பிறந்த மனு குலஇளம் தழைக்க வந்த மணியனைய சித்திரவல்லி அம்மானைவள் இளைய பிறை போல் நாளுக்கு நாள் பொன்னைப் பழித்த மின்னனைால்ல வளர்ந்து மங்கைப் பருவமுற்றுப் பெண்களுக்குச் சொல்ரிகை வேண்டிய கற்பிலக்கணங்களைக் கலனுகை அணிந்த காரிண்டு யின் குணாதிசயங்களைக் கேட்ட காவலன் காதல்கொண்டும் அப்பெண்ணைத்தான் விவாகம் செய்துகொள்ள வேண்டு வீர என்ற எண்ணத்தைத் தனது அருந்தவப் பிரசாதமான விமது வாகு தேவருக்கு அறிவிக்க அவரும் அதற்கிசைந்து தமசய அருமைத் தவபுத்திரியைக் கொடுங்கோல் கடிந்த குணாதிசணா னை முசுகுந்த சக்கரவர்த்திக்குக் கொடுத்துத் திருக்கலியாண மணவினை யாதிகளை விதிவழிப்படி செய்து வைத்தார்.

(உதாரணம்—கந்தபுராணம்—ஷ படலம் 39 வது கவி)

“அத்தகு பொழுதிற் பின்னை அனகனே சனகன் என்னு
புத்திரர் தம்மை நல்கிப் புவனியாண் முசுகுந்தர்க்கு
சித்திரவல்லி என்னும் சீர்கெழு புதல்வி தன்னை
மெய்த்தகு வதுவை நீரால் விதிமுறை வழாமலீந்தான்”

பிறகு வீரவாகு தேவர் திக்கு விஜயஞ்செய்து உலகிலுள்ள அரசர்கள் யாவரையும் வென்று முசுகுந்தச் சக்கரவர்த்திக்குக் கப்பமளிக்கச் செய்து தங்கள் அரசனுக்கு ஏக சக்கரேசன் என்ற பட்டம் அளித்துத் தாங்களும் அவருக்குத் துணைவரும் சுற்றமும் என்ற பெரும் புகழைப் பரவச் செய்து வாழுநாளில் திக்கு விஜயம் செய்த காலத்தில் நைமி சாரண்ய வாசிகளான தபதியர் கொடுத்த கிளிப் பிள்ளையைத் தங்கள் அருமைத் தவ புத்திரிக்குக் கொடுத்து நாள்தோறும் அக்கிளியினால் சண்முக தேவருடைய திரு புகழைக் கேட்டுப் போது போக்குவதுடன் சித்திரவல்லியார் தமது கரபூஷணமாக வைத்து விளையாடி காலம் போக்கி வரும் நாளில் மறலியின் மனைவியான சாமளா தேவியானவள் இந்தக் கிளியைக் கேள்விப்பட்டு தன்னுடைய கணவனுக்குச் சொல்லிப் பிணக்குடன் புல்லி, அக்கிளியை வாங்கித் தரும்படி பலவந்தப்படுத்த அதைக் கேட்ட இயம தருமன், நடுங்கிச் சித்திரவல்லியின் தந்தையாருடைய செயல்வீரப் பிரதாபத்தைக் கூறிப் பயமுறுத்த, அதற்கு அவள், சற்றும் இணங்காளாய், அவனோடு ஊடிச் சலிக்க, அது பொருத காலன், பின்வரும் வினையை அறியானாய் தனது தூதரை ஏவி, கிளியைக் கவர்ந்துவரச் செய்து தன் மனைவிக்குக் கொடுத்துச் சந்தோஷிக்கச் செய்தான். பின்னர், தாதியரால் கிள்ளையைக் காணோம் என்ற சங்கதியைக் கேட்ட சித்திர வல்லியானவள், இடியொலி கேட்ட உரகமென உளநடுங்கி மண்மேல் வீழ்ந்து, தெளிந்தெழுந்து, தன்னுடைய நாயக னுக்கு அறிவிக்க, அவர் சில சாரணராலும் வீரராலும் தேடி, இயம தர்ம ராஜனுடைய பத்தினி கையில் இருப்பதாய்த் தெரிந்த வீரவாகு தேவர் இயமனுளமும் உடலும் நடுங்கும்படி, ஒரு நிருபகம் எழுதி அனுப்ப, அத் திருமுகத்தைக் கண்ட இயமன் தன் மனைவியிடம் ஓலையைப் படித்துக் காண்பித்து, 'என் காதலி! இந்த ஓலையை வரைந்து விடுத்த வீரவாகு தேவரையும் அவர்கள் துணைவரையும் சாமானியராய் நினை யற்க. அவர்களை வெல்வதற்கு அயனாதிய மூவர்க்கும் அரி தென்றால் நம்போல் ஒத்தவர் ஜெயிப்பதோ? ஆதலால், கிளி

யைக் கொடு; நான் கொண்டு போய்க்கொடுத்து வருவேன் என்று இதமான வார்த்தையைக் கூறியும். அவள் கொடுக்க மனமில்லாதவளாக மறுக்க, இயமன் தனக்கொன்றும் தோன்றா தவனாய், தங்கள் திருமுகத்தில் சண்ட கிளிப்பிள்ளை மீண்டு உங்கள் வசம் திரும்புவதரிது. மேலும், 'இயமன் பிடிக்கவும் பிள்ளை பிழைக்குமா' என்ற பழமொழி நீ அறியாததா என்று பதில் எழுதித் திருப்பி விட்டான். அதனைக் கண்ட வீரவாகு தேவர் அடங்காக் கோபங் கொண்டு சகோதரர் புடைசூழச் சதுரங்கசேனையுடன் ஜெயமுரசு அறைந்து சமனவதியை முற்றுகையிட்டு வளைத்துக் கொண்டு வந்து எதிர்த்த இயம படாளைக் கண்டதுண்டமாய் வெட்டிக் கடும் போராடிக் கால னைத் தேர்க்காலில் கட்டித் தங்கள் மருமான் எதிர் கட்டினக் கட்டுடன் இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினர். அதைக் கண்ட சக்ரவர்த்தி மகிழ்ந்து, இயமனைக் கட்டவிழ்க்கும்படி வேண்ட, வீரவாகு தேவர் அவிழ்த்த பின்னர், இயமன் கிளியைக் கொடுத்து வணங்கினன். வீரவாகு தேவர் அவனுக்குச் சில நீதிகளைப் போதித்து அவன் இருக்கைக்கு அனுப்பினர். அரசன் கிளியைத் தன் மனைவிக்குக் கொடுத்து மகிழ்ந்தான்.

(கந்தவிரத விலாசம்)

"கனமிகு நடுவ செங்கோல் கடவுள்நீ தரும நீங்கித்
தினகரன்குல மாந்தாதா சேய்மனைக் கிள்ளையுந்தன்
மனையகங் கொடுத்தல் நன்றே வல்லைய தனுப்ப
வேண்டும்
என நவமந்திரிமார்கள் எழுதிய நிருபம் ஈதே"

(உதாரணம்: கந்தபுராணம்.
கந்தவிரதப் படலம். 41வது கவி)

"சித்திரவல்லி என்னும் சீருடைச் செல்வி அங்கோர்
தத்தையை வளர்த்தலோடும் தண்டகத் த்ருமன்தேவி
அத்தினிக்கிளியை வெஃக ஆங்கவன் தூதர் போந்து
கைத்தலத்ததனைப் பற்றிக் கடிதினில் கொடுபோய்
ஈந்தார்"

(42வது கவி)

"அவ்வழிக் கிள்ளைகாணுள் ஆயிழை அயர்தலோடும்
எவ்வழி போயிற்றோ என்றிறையவன் உலகின் நாடி
மைவழி கின்றமேனி மறலிதன் துணைவியாளை
கைவழி அமருந் தன்மைக் கதுமென உணர்ந்தான்
அன்றே"

(43வது கவி)

பூதலம் புரந்த செங்கோல் புரவலன் வீரமொய்ம்பன்
ஆதியர் தம்மைக்கூவி அங்ஙனம் தூண்ட அன்னோர்
ஏதமில் கரித்தேர்வாசி எல்லையின் மறவர் சுற்ற
மேதியங் கடவுள் மூதூர் விரைந்துபோய் வளைந்து
கொண்டார்"

(44வது கவி)

"தன்னகர் வளைத்தலோடும் தருமன் வந்தேற்றகாலை
அன்னவனொடு போர்செய்தே அடுமுரண் தொலைச்சி
அம்பொன்
வன்னமென்கிள்ளை தன்னை வாங்கினர் மீண்டும் தங்கண்
மின்னுள மகிழநல்கி வேந்தற்கு விசயஞ் செய்தார்."

கிளியைப் பெற்றுக் களிப்புடன் வாழுநாளில் வீரவாகு தேவர் புத்திரியும் முசுகுந்தச் சக்ரவர்த்தியார் பத்தினியுமான சித்திரவல்லிக்குச் சந்தான விருத்தி இல்லாக் குறையை முன்னிட்டு அரசர் மிக வருந்தி, வீரவாகு தேவர் முதலானவர்களுடன் இத்துக்கத்தினைக் கலந்து கொண்டாடினர். வீரதீர தேவர் முசுகுந்த மன்னர்க்குச் சர்ரவர்த்தி முடிபுனைவிக்க திக்கு விஜயம் செய்யச் சென்ற காலையில் கேரளதேயத்து அரசனிடம் சந்தான மாந்தரு ஒன்றிருப்பதாகக் கேள்விப்பட்டுள்ளேன் ஆதலால், அதனை இச்சணமே கொண்டு வருவேன் என சேனை சமுகங்களுடன் குடகு நாட்டை அடைந்தனர். அந்நாட்டு வேந்தன் வீரதீர தேவரின் திடும்

பிரவேச வருகைக்குத் திக்பிரமை கொண்டு பயபக்தியுடன்
எதிர்சென்று பணிந்து தேவர் ஈண்டெழுந்தருளிய காரணம்
அறிவிக்க வேண்டும் என்று வேண்ட, வீரதீரதேவர் 'குடகு
நாட்டதிபரே! புத்திரோற்பத்தியின் நிமித்தமாக யாக
முன்னிலையில் சந்தான மாந்தரு ஒன்று நீர் பெற்றிருப்பதாக
அறிந்து அதன் மாங்கனி ஒன்று நம் அரசர் பெருமானுக்குப்
பெற்றுச் செல்வதாக நாம் இங்கு உற்றனம். சீக்கிரம் ஒரு கனி
தையை செய்ய வேண்டும்' என்று விளம்ப, கேரள அரசன்
உலோப குணத்தால் மதிமயங்கி யக்கிய முன்னிலையில் பெற்ற
சந்தான மாங்கனியை மற்றையோருக்குக் கொடுக்க இயலா
தெனக் கண்டிப்பாய் உரைத்தான். வீரதீர தேவர் வெகுண்டு
எழுந்து, சேரனைச் சிறைப்பிடித்துத் தந்தேர்க்காலில் கட்டி
அவனது வில்கொடி முதலிய தசாங்கங்களையும் பறித்துச்
சந்தான மாந்தருவை வேரோடு பூமியோடும் பெயர்த்தெடுத்து,
அதைத் தடுத்த அனேக அரசரை மடித்து, செயமுரசு
அறைந்து கருவூர் அடைந்து முசுகுந்த மன்னரிடம் தாம்
கொண்டு வந்த சந்தான மாந்தருவை ஈந்தான். மன்னர்
பிரான் மனக்கவலை நீங்கி, மாங்கனிபெற்று மகிழ்ந்து மங்கை
கையில் தர, அவள் வாங்கிக் கந்தவேளைப் பலவிதமாநவரு
தோத்தரித்துச் சாப்பிட்டுச் சண்முக தேவர் திருவண்டு
ளினால் கர்ப்பம் அடைந்தனள். பின்னர் அரசன் வேன்பாதி
கோளினால் கேரளத் தேசத்தரசனைக் கட்டவிழ்த்து நீதியேல்லி
தன்னிருக்கை செலவிடுத்தார்கள். பின்னர் சித்திரவதில்
யம்மனுக்குப் பிறைபோல் வளர்ந்து வந்த கர்ப்ப காலத்அரச
பத்தாமாதத்தில் சில பழங்களில் இச்சை உண்டாகி, அதுக்
னுக்குத் தெரிவிக்க, அரசர் சில ஏவலாளிகளை மலையாளத்து
கனுப்ப. மலையாளத்தரசர் மன்னவன் ஆணையை மதிக்க
பழந்தராமல், ஏவலர்களை அடித்துத் துரத்துவதைக்கேட்க
முசுகுந்த சக்கரவர்த்தியார் வீரவாகு தேவருக்குத் தெரிவிஞ்
உடனே வீரவாகு தேவர் தம்பியர் புடைசூழ மலையாளர்.
சென்று செயமுரசு அறைந்து வெற்றிக்கொடி நாட்டின
அதை அறிந்த பதினெண் மலையாளத்தரசரும் அனேக சே

களோடு வந்தெதிர்க்க அவர்களை எல்லாம் முகூர்த்த நேரத்தில் அடியோ தண்டமாக அடித்து வெற்றிகொண்டு, வேண்டிய பழங்களை அவர்கள் முடிமீது கட்டிக்கொண்டு வரச் செய்து முசுகுந்த சக்ரவர்த்திக்குக் கப்பங்கட்டச் செய்து அடிமை முறி வாங்கி அரசன் ஆக்கினையைப் பதினெண் மலையாளத்தும் பரவச் செய்தனர்.

(உதாரணம் : கந்தபுராணம். கந்தவிரதப் படலம். 46வது கவி)

"மஞ்சு சூழ் மலை நாடுள்ளார் மன்னவர் மன்னனுணக்கு
அஞ்சலர் இகழ்ந்தலோடு மாடலம்புயனு மேனைச்
செஞ்சிலை வீரர்தாமும் சென்றன தன்னுட்டுள்ள
வெஞ்சுரம் ஈரொன்பானும் வென்றொரு பகலின் மீண்டார்"

(47-வது கவி)

"பூண்டிடு கழற்கால் வீரர் பொற்புறு புதல்வியானுள்
வேண்டிய தீயபைங்காய் வியத்தக நல்கிப் பின்னர்
ஈண்டுள தரணி எல்லாம் ஏகியே திறை கொண்டெங்கு
மாண்டைய மன்னன் கோலும் ஆணையு நடக்கச்
செய்தார்"

(வல்லான் காவியம் எழுச்சிச் சருக்கம்)

(31வது கவி)

"அந்தாமரைத் தவிசாள் புரையருமைத் திருமகட்காச்
சந்தான மாங்கனியும் பலதழை காய் இவை வேண்டி
வந்தார்க்கு அவை தாராது இறுமாப்பா அவர்தலைமேல்
உந்தாவமைத் தீண்டுற்றதை உணர்ந்துள்கலீர் போலும்"

சித்திரவல்லி இச்சித்த பழங்காய்களைத் தந்தையால் அருத்திக் கவலை நீங்கிப் பத்துமாதமும் நிறைந்து நல்ல சுபமூர்த்த ஓரையில் ஓர் ஆண் குழவியைப் பெற்றெடுத்தாள்.

(உதாரணம் : கந்தவிரத விலாசம்)

"சந்தான மாந்தருவை அடைந்து வேந்தன்
தனையனுக் கென்றதில் ஒருமாங்கனிக் கையேந்தி
கந்தா என்று அனந்த முறைத் துதித்துப் போற்றிக்
காதலி பால் தர அவளும் உண்டு கெர்ப்ப
நந்தாமல் உண்டாகிப் பலங்காய் வேண்ட
நவவீரரால் அதுவும் உண்டுத் திங்கள்
ஐந்தா ரேழ் எட்டு ஒன்பதாகிப் பத்தாய்
அருமையுடன் ஒருமகனைப் பெற்றாள் அன்றே"

அக்குழவி சூரிய குலத்தில் சூரியன் உதித்து வந்தது போல் சாமுத்திரிகா இலக்கணங்கள் நன்கமைந்திருக்கக் கண்டு முசுகுந்த மன்னன் அப்பிள்ளைக்குச் சோதிட நூல் வல்லோரால் நன்கு ஆய்ந்து 'அங்கிவன்மன்' எனப் பெயர் வைத்து வேத விதிப்படி வேதியர் முதலியவர்க்கும் தானம் வழங்கிப் பெருமகிழ்வு எய்தி அரசு புரிந்து வந்தான்.

இஃது இங்ஙனம் இருக்கப் பொன் உலகில் வலாசூரன் என்னும் ஓர் அவுணப்பாதகனால் நேரும் கொடிய துன்பத்தை ஆற்றாத வானவர் மிக வருந்தி மனம் மெலிந்து தேவர் கோனிடம் முறையிட்டார்கள். வச்சிரபாணி தமது படையோடும் சென்று வலாசூரனோடு நெடுநாள் போர்புரிந்தும் அவனைப் புறங்காணக் கூடாமையால் வாடி இக்கொடியோனை வெற்றிகொள்ளும் மார்க்கம் யாது எனச் சிந்தித்துத் தனது குருவினிடம் சென்று உரைக்க, பிரகஸ்பதி தேவர் சதமகனை நோக்கி, 'நீ வருந்தற்க, பூலோகத்தினிடை குமாரக் கடவுளினது இளவலர்களான நவவீரரை முசுகுந்த வேந்தன் சண்முகதேவர் சஷ்டி விரதத்தை நோற்று அவ்வீரரை விரத வரப் பிரசாதமாகப் பெற்று, திக்கு விஜயஞ்செய்து ஏகச் சக்ரேஸ்வரனாய் செங்கோல் ஓச்சி வருகின்றனன். அவ்[illegible]ன் பனைத் துணையாக அடைதியேல் இவ்வலாசூரனை வெற்றி பெறுவதற்கு ஐயமில்லை என அராவயிதனகம் களிதது வீறுக்கி[illegible]ன

பிரவர்த்தர்களான கந்தருவர்களைப் பூலோகத்திற்கு அனுப்பி முசுகுந்தச் சக்ரவர்த்தியை அழைத்து வரும்படி யேவ, கந்தருவர் பூலோகம் அடைந்து முசுகுந்தச் சக்ரவர்த்தியைக் கண்டு வெள்ளை வாரணர் எண்ணத்தை உரைக்க, முசுகுந்தன் நவவீரர்களுக்கு அறிவித்து அவர்களுடன் தெய்வ லோகம் சென்று வலாசூரனது நாட்டில் சென்று அவனோடு கடும்போர் புரிந்து அவன் சிரசை இந்திரனால் துணிக்கச் செய்து தேவர்களுக்கு உற்றவிடர் தொலைத்து தேவேந்திரனுக்கு 'வலாரி' என்னும் நாமஞ்சூட்டினர். பின்னர் தேவேந்திரன் வலாசூரனை வெல்லும் பொருட்டு நன்னெறி உடைய நவவீரரைப் படைத்துணையாய் அளித்த பேருநவிக்கு யான் என்ன பதிலுபகாரம் செய்யப் போகிறேன் என்று பலமுறை கொண்டாடித் தன் ஆன்மார்த்தமான தியாகராஜ பெருமான் எழுந்தருளி இருக்கும் ஆலயத்துள் முசுகுந்த சக்ரவர்த்தியை அழைத்துக் கொண்டு போய்க் கங்கையில் நீராடிக் கலை புனைந்து பெருமானைப் பூசை செய்தனன். அச்சமயத்தில் கைலாயத்தில் சோமாஸ்கந்த மூர்த்தமாகவே எம்பெருமான் எழுந்தருளி இருக்கின்றதைப் போலவே தரிசித்த மாத்திரத்தில் பரவசமடைந்து பாடியாடித் தொழுது பெருமானைத் துதிக்கத் தொடங்கினான்.

(உதாரணம்: கந்தபுராணம். கந்தவிரதப் படலம். 57வது கவி)

''எயிலையங் கெரியூட்டிய கண்ணுதலிமைய
மயிலுமைந் தனுமொருபுடை மகிழ்வுடன் மேவக்
கயிலையின்கணே அமர்தல்போல் இருந்தலும் கண்டான்
பயிலும் அன்புடை மன்னவன் பரவசம் ஆனான்''

(58வது கவி)

''ஆடினான் தொழுதேத்தினான் அடிகளை முடிமேல்
சூடினான் உளமுருகினான் துள்ளினான் சுருதி

பாடினன் கரங்கொட்டினன் பகரொணு உவகை
கூடினன் மொழிகுழறினன் பொடிப்பு மெய்கொண்டான்''

(67வது கவி)

''உறைதரும் அமரர்யாரும் உழையராய் நாப்பண்
மறைபயில் பெரியோருற்று வழிபட இருந்தாய் போற்றி
அறுவகை ஐந்தும் ஆறுமாகிய வரைப்பின் மேலாம்
இறைவனே போற்றிபோற்றி என்பிழை பொறுத்தி
என்றுரன்''

இவ்வாறு முசுகுந்தச் சக்ரவர்த்தியானவர் துதிக்கப் பெருமான் அவனது அன்பின் பெருக்கைக் கண்டு மனங் களித்து, ''மன்னனே! வெகுகாலமாய் நம்மை விஷ்ணு பூசித் திருந்து தேவேந்திரனுக்குக் கொடுத்தனன். இனி நம்மைப் பூலோகத்தில் கொண்டுபோய் நீ பூசிக்கக் கடவாய் என்று அனுக்கிரகித்தனர்.

(கந்தவிரதப் படலம் 68வது கவி)

''இவை முசுகுந்தன் கூற எம்பிரான் கருணை செய்தே
யவன் முகந்தன்னை நோக்கி ஆழியான் அளப்பில் காலம்
உவகையால் வழிபாடாற்றி உம்பர்கோன் இடத்தில்
வைத்தன்
புவிதனில் கொடுபோய் நம்மை பூசனை புரிதி என்றுன்'

இவ்வார்த்தையை இந்திரன் கேளாதபடி பெருமான் அனுக்கிரகிக்க முசுகுந்த சக்ரவர்த்தி மகிழ்ச்சி அடைந்து, தேவரீர்! திருவுளம் ஈதாயின் அடியேன் உய்ந்தனன்' என்று அளவிலா உவகை அடைந்தான். தேவேந்திரன் தியாக ராஜப் பெருமான் பூசையை முடித்து அக்கினி காரிய முதல கடன்களை முடித்து மந்திரங்களை ஜெபித்து காமதேனுவில் சக்ரவர்த்தி வீரவாகு தேவர் முதலானவர்களுக்கும் விருந்து செய்வித்து சந்தனம், புட்பம், தாம்பூலம், வஸ்திராபரண முதலியவை அனைத்தும் வெறுப்புற அளித்து, இன்னம்

வேண்டியவைகளை எல்லாம் கேட்கக் கடவீர்' என்னலும் மன்னவன் பூலோகத்திற்குக் கொண்டுபோய் யான் பூசிப்ப தற்கு நின் ஆன்மார்த்தமான தியாகராயப் பெருமானை கொடுக்க வேண்டும் என்று கேட்டனர். அதைக் கேட்ட இந்திரன் கூறுவான் : கேளும் சக்ரவர்த்தியே விஷ்ணுவானவர் புத்திர பாக்கியத்தை விரும்பிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய, சுவாமி பிரசன்னமாகிப் புத்திரனை அனுக்கிரத்தோம் என்று அருளிச் செய்ய மாதவன் பார்வதியை நமக்கு தங்கை என்றே அல்லது நம்மைப் போலும் சிவத்திற்குச் சத்தி என்றே அல்லது மலையரையன் பெண் என்றே நினைக்க மறந்தோ அறிகிலோம், பெருமாட்டியை வணங்காமல் இருந்தனர். சகல புவனங்களையும் ஈன்ற பார்வதி கண்ணனைக் கடுங்கோபத் தோடு நோக்கி, 'என்னை இங்ஙனம் அவமானப்படுத்தியதால் நீ பெற்ற புத்திரன் பரமசிவனால் அழியக் கடவதென்று கடுஞ் சாபமிட்டுக் கண்ணுதலான பசுபதியை நோக்கி, 'சுவாமி! இம்மாயவன் உலகத்திலுள்ள ஆன்மாக்களை எல்லாம் நான் தான் பரப்பிரமம் என்று மருட்டித் திரிகின்ற வஞ்சகன். முன்னர் ஞானிகளால் அல்லது மற்றவர்களால் ஒருக்காலத்தும் காணுதற்குக் கூடாத தேவரீர் இவன்முன் சமீபித்திருப்பது ஞாயமோ? எழுந்திரும்' என்று உரைத்தாள்.

(கந்தவிரதப் படலம். 82-து கவி)

"ஆனதோர் பரப்பிரமமும் யானே யல்லது
இல்லை என்ற அறிவிலாப் பேதை!
மானிடப் பெரும் பசுக்களை எல்லா மருட்டியே
திரி வஞ்சகன்; முன்ன
ஞான நீரினர் அறிவினல் அன்றி நணுகுராத
நீ அணுகி நிற்பதுவோ?
ஊனுலாவிய உயிரினுக்குயிராம் ஒருவ!
சொல்லுவதும், வருகென உரைத்தாள்"

இந்தப் பிரகாரம் சொல்லிப் பெருமானை அழைத்துக் கொண்டு பிராட்டியார் எழுந்து செல்வதைக் கண்ட கண்ணன் அச்சமுற்று மனம் வருந்திப் பின்னரும் பரமசிவனையும் பார்வதியையும் பாலசுப்பிரமணியரையும் பசும்பொன் விமானத்தில் எழுந்தருளச் செய்து. ஆகமவிதிப்படி அன்னோர்களைக் குறித்து அருந்தவம் இயற்றினன். கண்ணனது தவத்தை வியந்த கங்கைவார் சடையான் கௌரியோடும் காட்சி அளிக்கக் கார்வண்ணன் கண்டக மகிழ்ந்து வணங்கலும் பார்வதி கேசவனைப் பார்த்து, 'நீ புத்திரனைக் குறித்து புரிந்த தவத்திற்கு இரங்கினோம். நினக்கு உதிக்கும் பிள்ளை அரூபமாக இருப்பான் என்று அனுக்ரகித்து, சூலபாணியுடன் கைலைக்கு எழுந்தருளினர். அதுமுதல் இவ்விமானத்தை தாமோதரன் தனது மார்பிடை வைத்துப் பாற்கடலில் ஆலிலையின் கண் அரிதுயில் அமர்ந்தனர். இங்ஙனம் இருக்க வானுலகில் வார்கலி என்னும் அசுரன் ஒருவன் வானவரை வருத்திவர, அவ் அவதியை ஆற்றாத ஆகண்டலன் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பஞ்சாயுதனிடம் முறையிட, கமலைக்கேள்வன் கருணை கொண்டு கருட வாகனத்தில் அமர்ந்து சுரலோகம் எய்தி, சூரனைக் கொன்று திரும்புகையில் பத்மநாபன் பார்வதியும் குமாரவேளும் பரமனும் வீற்றிருக்கும் பசும்பொன் விமானத்தை எனக்கு தியாகமாகக் கொடுத்து இதனைப் பூசித்து வருவாய் என்று பணித்தேகினர். அதுமுதல் இதுவரையில் இவ்விமானத்தை யான் பூசித்து வருகிறேன். ஆகையால், நீர் அதை விரும்பிக் கேட்கின்றமையால் யான் கொடுக்கப் பாத்யன் அலன். கார்வண்ணனாகிய கடவுள் உமக்குக் கொடுக்கும்படி கிருபை செய்வாராயின், நான் கொடுக்க சித்தமாக இருக்கிறேன்!' என்று இந்திரன் கூற, உடனே முசுகுந்த சக்ரவர்த்தி விஷ்ணுவை பூசிக்க, கமலைக்கேள்வன் பிரசன்னமான அச்சந்நிதானத்தில், அரசன் தன் எண்ணத்தை உரைக்க, கண்ணன் வச்சிரபாணியிடம் வந்து தியாகராசப் பெருமானை முசுகுந்த சக்ரவர்த்திக்குக் கொடுக்கும்படித் திருவாய் மலர்ந்து சென்றார்.

(கந்த விரத விலாசம்)

"கார்பதிசொல்லக் கேளாய் கடன்மிசை உறங்கும் போதென்
மார்பதிந்தாடல் செய்யும் வள்ளலும் குமரவேளும்
பார்வதியுடன் அமர்ந்த பசும்பொன் விமானந்தன்னைச்
சூர்பதி அழித்த வேலோன் தொண்டனுக்கு அளிப்பாய் இன்றே"

அவ் வார்த்தையைக் கேட்ட அயிராணி கேள்வன் மனங் கலங்கிப் பசுவைப் பிரிந்த கன்றுபோல் முகம்வாடி யோசித்து தனது . ஆத்மார்த்த தியாகராசப் பெருமானை எடுத்துக் கொடுக்க மனம் இல்லாதவனாய் ஒரு உபாயங்கருதி தேவதச்சனைக் கொண்டு வேறு தியாகராசப் பெருமனைச் சிருஷ்டித்துக் கொடுக்க நினைத்தனன். அதை அறிந்த கண்ணுதல், சக்ரவர்த்தி அறியும்படி தேவேந்திரன் தியாகராசரைக் கொடுக்குங் காலத்தில் 'நீர்தான் தியாகராசரோ ?' என்று கேள். ஆமாம் என்றால், அதை இந்திரன் ஆத்மலாபம் எனக் கருதி, வாங்கி வான்மீக நாதன் எழுந்தருளி இருக்கும் திருவாரூரில் வைத்து பூசிப்பாய் என்று பரமசிவம் இந்திரன் அறியா வண்ணம் திருவாய் மலர்ந்தனர். உடனே முசுகுந்தச் சக்ரவர்த்தியார் சந்தோஷம் அடைந்து ஆகண்டலன் விஸ்வகர்மாவால் சிருஷ்டித்து தரப்பட்ட ஆறு தியாகராஜ பெருமானைக் கொடுக்க சிவபெருமான் திருவருட்படியே அம்மூர்த்தம் அல்ல என்று உரைத்து ஏழாவது தன் ஆன்மார்த்தமான தியாகராசப் பெருமானைக் கொடுத்தவுடன் அம்மூர்த்தங்கள் ஏழையும் பெற்றுக்கொண்டு பூவுலகில் சிறந்துள்ள திருவாரூர், திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்கோளறியூர், திருவாய்மியூர், திருக்காறுயல், திருமறைக்காடு முதலிய சப்த சேத்திரங்களினும் தாபித்தனர்.

(கந்தவிரதப் படலம் 117-வது கவி)

"நன்றெனவே விடைகொண்டு நானிலத்தின்
இடையிழிந்து
தென்றிசை ஆரூர் தன்னில் சிவனுரை பூங்கோயில் புக்கு
மன்றல்கமழ் தண்டுளவோன் வழிபடவீற்று இருந்தோரை
வென்றியரியணை மீதில் விதிமுறையால் தாபித்தான்"

(118-வது கவி)

"கடல்நாகை நள்ளாறு காராயல் கோளறியூர்
மடனுகை முத்தீனும் வான்மியூர் மறைக்கான
முடனுகுந் தலமாறில் ஒருறு வடிவு கொண்ட
படனுகை மதிவேணிப் பரஞ்சுடரை அமர்வித்தான்"

இங்ஙனம் அமர்வித்த விடங்கப் பெருமானுக்கு பிரம உற்சவம் முதலான பஞ்ச பர்வமும் நித்தியாராதனையுஞ் செய்வித்து சிலகாலம் செங்கோலோச்சி வாழ்ந்திருந்த பின்னர் முதன்மை பெற்ற வீரவாகு தேவர் முசுகுந்தச் சக்ரவர்த்தியை விளித்து வேந்தே எனது சண்முகக் கடவுள் அனுக்ரகித்த படியே ஓராயிர வருடமாக நாங்கள அனைவரும் தங்களிடம் இருந்தோம். இனி அக்காலம் முடிந்தபடியால் ஆறுமுகக் கடவுளை நோக்கி அருந்தவம் செய்து, கந்தவேள் வீற்றிருக்கும் கந்த மாஞ்சிலம் பிற்கேக வேண்டும் ஆதலால் விடையளிப்பீர் என்று வினவினர்.

(கந்தவிரத விலாசம்)

"மாயிருஞாலச் சக்ரவர்த்தியே கேளாய் இந்த
ஞாயிரு குலத்தில்வந்து நாள்பல வரசுசெய்தோம்
ஆயிரவருட காலமானதால் அனல்கண் ஆதி
சேய்அறுமுகன் பொற்பாதம் சேர்ந்திட வேண்டும்
இன்றே"

என்று இவ்வாறு கூறிய வார்த்தையைக் கேட்ட முசுகுந்த மன்னர் வீரவாகு தேவர் ஆதியரை நோக்கி, மனுகுலம் தழைக்க வந்த மணி அனைய மாதவர்களே உங்களால் இது வரையில் யான் பெற்ற பேருதவிக்கு யான் என்ன பிரதி உப காரஞ் செய்வேன். ஆனதால் எனது குமாரன் அங்கிவன்ம னுக்குத் தங்கள் அருமைத் திருக்கரத்தால் திருமுடி சூட்டிக் களிக்க வேண்டும் என்ற விருப்பமுளதால் நீவிர்கள் திருவருள் சுரந்து அதனை முடித்து அருளல் வேண்டும் என்று இறைஞ்ச, வீரவாகு தேவர் தம் இளவலர்களோடு இதனை ஆராய்ந்து நன்றெனக் கொண்டு அங்கிவன்மனுக்கு அட்டமங்கலம் முழங்க ஆகம விதிப்படி அரசு முடிபுனைந்து மற்ற தம் புத்திர பவுத்திரர்திகளுக்கு ஐம்பத்தாறு தேயங்களையும் எழுபத்தி ரண்டு நாடுகளாகப் பிரித்து அந்நாடுகளாகிய தாமரைக் கமலத் திற்குப் பொகுட்டுப் போன்ற காஞ்சீபுரம் மகாநாட்டிற்கு இளவரசாக அனகமூர்த்திக்கு பட்டாபிஷேகம் செய்து சிங்கா தனத்தில் எழுந்தருளச் செய்து முன்னொருக்கால் அத் தலத்திலும் மாதேவியர் பரமசிவனைக் குறித்து தவமியற்ற வந்த போது அப்பதியை நான்கு எல்லையாக வகுத்து கீழ்புறத் தெல்லையாகிய சிவபுரத்தில் நந்தி தேவரையும், தென்புறத் தெல்லையாகிய தொந்தி புரத்தில் கணபதியையும், மேற்புரத் தெல்லையாகிய விரிஞ்சீபுரத்தில் கந்த நாதரையும் வடபுரத் தெல்லையாகிய சோளிங்கபுரத்தில் வயிரவரையும் காவலாக வைத்திருந்த காரணம் கருதி நமது மாதா விதித்த வண்ணமே அரசாங்கம் விதிக்கத் தக்கது என நினைத்து அக்கமலத்திற்கு அகவிதழ் போன்ற மேற்றிசை. தென்றிசை, வடதிசை, கீழ்த் திசையாக நான்கு எல்லைகளுக்கும் முறையே சனகன், கௌமாரன், கஜகோளர். சிவசங்கரர் இவர்களுக்கு முடிசூட்டி இவ்விதமாக எழுபத்திரண்டு நாடுகளுக்கும் நாட்டாதிகாரம் கொடுத்து இதுவே உங்களுக்கு சத்திரியத் தொழிலாகும். ஆனால், காஞ்சிபுரம் மகாநாட்டில் ஆயிரத்து தொளாயிரவர் என்று சொல்லும் ஆண்டவர்களுக்கு இவ்வெழுபக்திரண்டு நாட்டிலும் உள்ள நம்மவர்கள் சாதி ஆச்சார அனுஷ்டானங்

களுக்குக் கட்டுப் பட்டு நடந்து கொள்ள வேண்டியது என்றும் நமது செங்குந்த ஜாதியில் வரும் வழக்குகளை நமது நாட்டினும் அல்லது திசை நாட்டினும் அல்லது நாடு எழுபத்திரண்டுக்கும் மகாநாடான காஞ்சீபுரம் மகாநாடு ஆண்டவர் இடத்திலும் சொல்லித் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது என்றும் கூறி, இவ்வுலகில் ஆகம விதிப்படியுள்ள பூத்தொடுத்தல், தைத்தல், ஓதுவித்தல், எழுதல், நெய்தல் ஆய ஐந்து வித சிறந்த தொழிலில் சிரேஷ்டமான நெய்தல் தொழிலையே சீவனுதார மாகக் கைக்கொண்டு நமது தமையரும் நம்குல தெய்வமும் ஆகிய சுப்பிரமண்யக் கடவுளைச் சதா சிந்தித்துக் கொலை களவுகள் காமம் பொய் முதலிய பஞ்சமா பாதகங்களை அறக் கடிந்து நீங்கள் யாவரும் சிவ சொரூபமாகிய திருவெண்ணீறு, உருத்திராக்கம். செபதபம், பஞ்சாட்சரம் முதலிய ஆச்சாரங் களை வழுவில்லாமல் அனுஷ்டித்து வரக்கடவீர் என்று திருவாய் மலர்ந்து ஸ்ரீ சிவபெருமான் கொடுத்த வீரவாள், பார்வதியார் கொடுத்த செங்குந்தம், வெற்றிச் சங்கம், கொன்றைமாலை, வில், அம்பு, அம்பராத் தூணி, கத்தி, கேடயம், டங்கா, வெங்கலக் கொம்பு, நகார் காகளம், பஞ்சவர்ணத் தாரை, லவண்டை, செயபேரிகை சண்முகதேவர் கொடுத்த புலிக் கொடி, கோழிக்கொடி, கமலைக்கேள்வன் கொடுத்த கருடக் கொடி, பிரமதேவன் கொடுத்த அன்னக்கொடி, முசுகுந்தச் சக்ரவர்த்தி கொடுத்த முத்துக்குடை, வெள்ளைக்குடை, மகுட தோரணம், சாம்ராணிக் கலசம், பகல் தீவத்தீ, ஆறுகால் பீடம், தேவேந்திரன் கொடுத்த வாடாத மாலை, தேவ சிம்மா சனம் முதலான பல விருதுகளைக் கொடுத்து ஆசீர்வாதம் செய்து, 'குழந்தைகாள்! யாங்கள் கந்தமாதனம் செல்கின் றோம்' என்று கூறின வசனத்தைக் கேட்ட சிறுர்கள் கலக்கம் எய்தி, 'தந்தையீர்! யாங்கள் செய்யும் இளவரசைக் கண்டு, களிக்காமல் சண்முகக் கடவுள் அருட் பிரகாசத்தை விரும்பி கைலாயத்திற்குச் செல்லும் தங்கள் அடியிணையை இனி என்று காணப் போகிறோம் என்று ஏங்கின ஆயிரத்து தொளாயிர மக்களையும் பார்த்து வீரவாகு தேவர் சொல்லுவார். 'என்

கண்மணி அனைய மக்களே! கேளுங்கள், உலகத்திலுள்ள குகாலயங்கள் தோறும் சூரசம்மார உச்சவம் என்னும் மகோச்சவத்தை சிவாலயங்கள் தோறும் ஸ்ரீ கந்தநாதனுடன் நமது குலப்பிள்ளைகளில் ஒன்பது பேரை வீரவாகு தேவராக நியமித்து துலாமாசப் பூர்வ பட்சப் பிரதமை முதல் சஷ்டி வரையில் ஸ்தனை செபதப கங்கணத்துடன் சண்முகக் கடவுளுடன் பிரதட்சணம் வரச்செய்து அவர்களை யாங்களாகப் பாவித்துத் துதிப்பிரேல், யாங்கள் அவர்கள் முகத்திலிருந்து நாங்கள் உங்களுக்கு காட்சி தருவோம். நாம் சூரபதுமனிடத்தில் தூது போன காலத்தில் சூரன் மகன் வச்சிர வாகுவைக் கொன்று அவன் முதுகுத் தண்டெலும்பை வீரமகேந்திரக் கோபுரத்தில் நாட்டி விளையாடினேன். அவ்வண்ணம் மகா ஸ்தலங்களிலுள்ள கோபுரத்தின் மேல் நமது நாடு 72 என்னும் கணக்குப்படி 72 அடியுள்ள ஒரு வேணுவினால் தம்பம் கொண்டு நாட்டி, நமது குலப்பிள்ளைகளில் ஒருவனைக் கொண்டு வந்து சோடச உபசாரப்படி அவனைப் பூசை செய்து யானைப் பாவித்து அத்தம்பத்தில் ஏற்றி விளையாடக் கண்டு வணங்கி வாழக் கடவீர் என்று கட்டளை இட்டனர்.

(கந்த விரத விவாசம்)

சூரனது சம்மாரம் தன்னை ஈசன்
தூய தலத்தெல்லாம் நங்குகனாய் ஒப்பான்
வீரர்களாய் இருந்தவரை யாங்கள் என்ன
விழவாற்றிப் போற்றுங்கள் வருடந்தோறும்
கோர வச்ரவாகு எலும்பைச் சூரன் ஊரில்
கோபுரத்தில் நாட்டி விளையாடினேன் அக்
காரணத்தால் அவ்வண்ணம் ஆற்றிப் போற்றிக்
கண்மணிகாள் கண்டிருக்கக் கடவர்தாமே''

இவ்வாறு வீரவாகு தேவர் பிள்ளைகளுக்குச் சில நீதியைப் போதித்தனர். முசுகுந்தச் சக்ரவர்த்தியும் தனது குமாரனை அங்கிவன்மனுக்கு அரசுரிமை அளித்து சண்முகப் பெருமான் அருளால் கைலாயமடைந்தனர். பின்னர், வீரவாகு தேவரும்

இலட்டத்தெண்மரும் கந்தவேளை நோக்கித் தவம் செய்து மானவதனுவை நீக்கி தேவ தேகம் பெற்று கந்தமாதன பர்வத மடைந்து வேலாயுதத்தைத் திருக்கரத்தில் கொண்ட சண்முக தேவர் திருவடியில் வீற்றிருந்தனர்.

(கந்தவிரதப் படலம் 12 வது கவி)

துங்கமிகு முசுகுந்தன் தொல்கையிலே அடைந்த பின்னர்
எங்கள்விறன் மொய்ம்பினனும் இலக்கருடன் எண்மர்
களும்
தங்கள் சிருர்தமை விளித்து தத்தமது சிறப்பு நல்கி
அங்கிவன்மன் பால்இறுத்தி அரியதவம் ஆற்றினரே''

(126வது கவி)

''மாதவம் எண்ணில் இயற்றி மானுடத் தன்மையை நீக்கி
ஆதிதனில் அடல்எய்திய அருள்முறையால் அனைவர்
களும்
மேதகுசீர் கந்தகிரி விரைந்தேகி வேல்கடவுள்
பாதமலர் பணிந்தேத்திப் பத்திமை செய்து உற்றனரே''

இவ்வாறு வீரவாகு தேவர் முதலானவர்கள் கந்தமாதனம் அடைந்த பின்னர் அவர்கள் பிள்ளைகளான அனகன் முதல் ஆயிரத்து தொளாயிரவரும் காஞ்சீபுரம் மகாநாடு முதல் எழுபத்திரண்டு கிளை நாடுகளிலும் பிதா வாக்கிய பரிபாலன ராய் மனு நூல் வழாது அரசு செய்வதோடு செங்குந்த சாதி ஆச்சார கிர்த்தியங்கள் வழுவாது சுத்த ஆச்சார அனுஷ்டான நித்திநியதி தவருராய்ப் பரமசிவன் முகத்துதித்த ஆதிசைவப் பிராமணர் போல் வாழ்ந்திருந்தார்கள்.

(கந்தவிரதப் படலம். 127வது கவி.)

''நூற்றெழி யீராயிரரில் நுவலும் இவர் சிருர் மறையோன்
ஆறெழுமுன் மூவருண்ணரரு தொழிலேற்று அறநூலில்
கூறுநெறி பிறழாக் கைக்கோளர் எனச் சிறந்தனரால்
ஈறில் சிவன் முகத்துதித்த இருங்குரவரவர் ஈட்டம்போல்''

தில்லையில் தீட்சதர் மூவாயிரவர் என்றபடி காஞ்சீபுரம் மகாநாட்டில் செங்குந்தர் ஓர் ஆயிரத்து தொள்ளாயிரவர் என்று இரட்டைப் புலவர் முதலிய பெரியோர்களால் புகலப் பெரும் பிரபாவத்துடன் தங்கள் தங்கள் மனைவியரோடு கூடி வாழும் நாளில் சிலகாலம் சென்ற பின்னர் அச்செங்குந்தர்கள் மனைப்புத்திராதிய சிற்றின்பத்தாலும் அன்னிய சாதிகுருத்துவத் தாலும் அவர்கள் வஞ்சகமாய்ப் போதிக்கும் உபதேசத்தாலும் பிறவிக்கேதுவாய் மாயையின் வசத்தராய் மயங்குவதை உணர்ந்த குகக் பெருமான், ஆதியில் வீரவாகு தேவர் முதலிய இளவலர்க்கு மானவ சரீரம் கொடுத்து மாநிலம் முழுதாள வேண்டித் தவஞ்செய்த முசுகுந்தச் சக்ரவர்த்திக்குத் துணைவ ராய் அனுப்பிய போது மற்றவர்கள் புத்திரர்களையும் மாயா வசத்தராகாமல் தாமே தடுத் தாட் கொள்வதாய் கட்டளையிட்ட படியே அவர்கள் புத்திர பவுத்திரர்களான ஆயிரத்தி தொளா யிரவர்களுக்குத் தாமே குருமூர்த்தமாகச் சென்று ஞானோப தேசம் செய்து மாயையிற் புகாமல் தடுத்தாட் கொள்ளவும் திருமேற்றளியாலத்தில் சாரூப பதத்தை வேண்டித் தவஞ் செய்யும் கமலைக்கேள்வர்க்கு அப்பதம் அருளவும் புத்தர் முதலிய புறச்சமயப் பூடுகளைக் களையவும் சைவப் பயிர் தழைத் தோங்கவுங் நினைத்து சீர்காழி யம்பதியில் திருஞான சம்பந்த ராகத் திருவவதாரம் செய்து சிவத்தலங்கள் தோறும் சென்று தேவாரப் பதிகம் ஓதி சிவதரிசனம் செய்து புறச்சமயர்களான புத்தர்களை வென்று உலகமெங்கும் புகழ் பெற்றோங்கும் காமாட்சியம்மையார் தவம் புரிந்த பிரிதிவுத்தலமான மகா நாடென்னும் காஞ்சீபுரம் வந்து சேர்ந்தனர். அவர் வரவை அறிந்த அந்நகர வாசிகளான ஆயிரத்தி தொளாயிரவர் என்னும் உபசுப்ரமண்யர் புத்திரரான செங்குந்தர்களும் மற்று முள்ள ஏனையரும் வந்து எதிர்கொண்டு பணிந்து உபசரித் தார்கள். திருஞான சம்பந்த சுவாமிகள் அனேக அடியார் கூட்டங்களுடன் செங்குந்தரும் புடைசூழ திருமேற்றளி என்னும் சிவாலயத்தை அடைந்து சிவபெருமான் பேரில் தேவாரப் பதிகம் ஓதி, சங்காழியற்கு சாரூப பதமருளி அத்தலத்

தருகில் அச்செங்குந்தர்கள் தமக்கு வகுத்த ஆலயத்தில் வீற்றிருந்து அச்செங்குந்தர் ஆயிரத்தி தொளாயிரவருக்கும் ஞானோபதேசம் செய்து புனிதராக்கிப் பக்குவம் வந்த சிலருக்கு ஆச்சாரிய அபிடேகம் செய்து அதுமுதல் இனி வரும் குலத்தின ருக்கு இனக்குருவான அவர்களையே உபதேசம் செய்துவரப் போதித்து அவ்வாதீனத்திற்கு 'ஆளவந்த வள்ளலார் ஆதீனம்' என்று பெயர் கொடுத்து அச் சிவகுமாரர்களான செங்குந்தர் வசிக்கும் இடத்திற்கு தமது பெயர் விளங்க 'பிள்ளையார் பாளையம்' என்று வழங்கவும் வீற்றிருக்கின்றனர்.

ஆச்சாரிய அபிடேகம் பெற்ற பிள்ளையார் பாளையம் ஆள வந்த வள்ளலார் ஆதீனம் கச்சபேசுர தசிகர் சதாசிவ தேசிகர் முதலான இனக் குருக்களிடத்தே அச் செங்குந்தர் உபதேசம் பெற்று வருகின்றனர். காஞ்சீபுரம் மகாநாட்டி லுள்ள அச்செங்குந்தர் ஆயிரத்து தொள்ளாயிரவரும் தங்கள் நாட்டில் வருவிவகாரங்களை தங்கள் குலதெய்வமும் குலக்குருவு மான திருஞானசம்பந்தர் சன்னிதியில் சபை சேர்ந்து பேசி முடித்து தீர்மானித்து வருகிறார்கள். இன்னம் இவர்கள் குலத்தில் வந்தவதரித்து வல்லாளை வென்ற வீரன் நாராயணன் முதலிய துவாதச வீரரின் பெருமையை வல்லான் காவியத்தால் அறியவும்.

செங்குந்தர் சரித்திரச் சுருக்கம்
முற்றியது.

—○—